# 'மக்களுக்குப் பயன் தரக் கூடிய புதிய சமாதான சபை சட்டங்கள்

# இயற்றப்படும்

## உதவிநீதிஅமைச்சர்தகவல்

அளவெட்டி, செவ்வாய் சமாதான சபைச் சட்டங்களில் சில பழைய சட்டங்களாக இருக்கின்றபடியால் மக்களுக்கு பயன்தரக் கூடியவகையில் புதிய சட்டங்களை இயற்ற கமிஷன் ஒன்று மிக விரைவில் நியமிக்கப்படஇருக்கிறது.

இத் தகவலை உதவி நீதி அமைச்சர் அளவெட்டியில் வெளியிட்டார்.

அளவெட்டி மல்லாகம் சமாதானசபையை இணக்க சபையாக சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டதை உறுதிப் படுத்துவதற்காக நேற்று அளவெட்டி மகாஜன வாசிகசாலை மண்டபத்தில் நடந்த விழாவில் கலந்துரையாற்றிய போதே உதவி நீதி அமைச்சர் திரு. நெய்னா மரிக்கார் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான சபைகள் சட்டத்தை கடைப்பிடித்து கிராமத்தில் நிகழும் பிணக்குகளை தீர்க்கவேண்டும். இச்சபைகள் இப்படி தீர்ப்பதால் கிராமமக்களின் பணம் மிகுதியானதும், வேலைகளும் மிகுதியாகின்றன.

நாட்டில் சமாதானம் நிலவ இலங்கையிலுள்ள பல நீதிஸ்தலங்களில் உள்ள சட்டங்களில் இது புதிய சட்டமாக அமைத்துள்ளது. இச்சட்டத்தின்படி 272 சபைகளின் மூலம் 18000 பிணக்குகளில் 8000 பிணக்குகள் சமரசமாக தீர்க்கப்பட்டுள்ளன. இது 100க்கு 65 வீதம் வெற்றியளித்துள்ளது.

இச்சட்டங்களில்சில பழம் சட்டங்களாக இருப்பதால் மக்களுக்கு பயன்தரக்கூடியதாக புதிய சட்டங்களை இயற்ற கமிஷன் நியமிக்கப்பட இருக்கிறது.

புதிய சட்டங்கள் மக்களுக்கு நல்ல பயனைதரும் என எதிர்பார்க்கிறேன் என்று கூறினார்.


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. [illegible]
முற்பணம் கட்ட வேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:126
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-0

யாழ்ப்பாணம் ஆனி 4 ரபி; ஆகி 2 புதன்கிழமை [18-6-69]


# 'நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் மறுக்கிறது

## நேரடி நடவடிக்கை தவிர்க்க முடியாதாம்'

### வடபகுதி இ. போ. ச. ஊழியர் சங்கங்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

"வடபகுதி இ. போ. ச. தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிர்வாகம் அரசியல் திரை போட்டுத் தப்பித்துக்கொள்ள முயல்கிறது. பொதுமக்களின் வசதியையோ, தொழிலாளரின் நன்மையையோ கருத்திற்கொண்டு செயலாற்றவில்லை. எனவே நாம் நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டிய கட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம்"

இவ்வாறு வடபகுதி இ. போ. ச. ஆறு தொழிற்சங்கங்களும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளன.

வடபிராந்திய இ.போ.ச முகாமையாளர் நேற்று வெளியிட்ட அறிக்கைக்கு பதிலாக வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டுள்ளதாவது:-

ஈழநாடு பத்திரிகையில் [illegible] நொண்டிச் சாட்டுக் கூறியுள்ளார். ஆனால் இக் கோரிக்கைகள் இ. போ. ச. சட்டவரம்புக்குட்பட்டதோடு, மற்றும் டிப்போக்களில் நடைமுறையிலுள்ளதென்பதை அறியத்தருகிறோம். நிர்வாகம் நியாயமான கோரிக்கை

## 'மற்றிரு பாடசாலைகளும் பொறுப்பேற்கப்படும்'

யாழ்ப்பாணம், புதன்

நமது முயற்சியால் பௌத்த பாடசாலைகள் மூன்றையும் அரசாங்கம் கையேற்றுள்ளது. மற்றை இரு பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் விரைவில் கையேற்கவிருக்கிறது.

அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ்பொதுக் கூட்டத்தில் யாழ் நாகவிகாரை பீடாதிபதியான வண நந்தாராம நாயக்க தேரோ மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரையில் திரு. ஜே. ஆர். டேவிட் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நாயக்க தேரோ மேலும் கூறியதாவது:

அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் வடபகுதியில் உள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு சகல உதவிகளையும் செய்ய இருக்கின்றது. இந்த இயக்கத்தை சிதைவு படுத்தசிலர் வேறு பௌதத சங்கங்களை ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பிக்கப்படும் பௌத்த சங்கங்களுக்கும் நாகவிகாரைக்கும் எவ்வித தொடர்பும் இருக்காது.

திரு. எஸ். ஈ. விஜயசுந்தர பௌத்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக 50 ரூபா வழங்கினார். சகல பௌத்த பாடசாலைகளுக்கும் தேவையான தளபாடங்களை தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'கூட்டுறவுமுறையில்இளைஞர் தீண்டாமையை ஒழிக்கலாம்'

## குடிதண்ணீர் கஷ்டம்

பருத்தித்துறை, செவ். கடும் வரட்சி காரணமாக பருத்தித்துறை நகரப் பகுதி

## பாஷையூர் மக்களுககு நாளைவெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம், புதன்

பாஷையூர் மீனவர்களுக்கான வெள்ள நிவாரணம் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் காரியாதி அலுவலகத்தில் வழங்கப்படவிருக்கிறது.

1967ம் ஆண்டு வெள்ளத்துக்கான இந்த நிவாரணம் பாஷையூர் மீனவர்களுக்காக மட்டும் விசேஷமாக வழங்கப்பட விருக்கின்றது. சுமார் 1770 ரூபா இந்த நிவாரணத்துக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது.

(கா. நி)

## பாடசாலைசளில் துணி விற்பனை

சிவயோக சமாஜத்வல் யோகாச்சிரமப் பிரசேதி நினைவு விழாவை முன்னிட்டு இராமலிங்க வள்ளலார் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு திரு. இ வைத்தியலிங்கம் தலைமை தாங்கினார் மாலை நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு டாக்டர் க.சு. சித்திரவேலு தலைமை தாங்கினார்.

கவிஞர் க. சொக்கலிங்கம், திரு. செ தனபாலசிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு, வே சிவஞானத்தின் "திருமுறைப்பா" இசையும் இடம்பெற்றது.

## ஆலயப்பிரவேசத்தை பின் போடுவது உகந்ததல்ல

### ஆலோசனைக் கூட்டத்தில் கருத்து

யாழ்ப்பாணம், புதன்

ஆலயப்பிரவேசத்தை எக்காரணம் கொண்டும் தற்பொழுதுள்ள சூழ்நிலையில் பின்போடுவது உகந்ததல்லவென யாழ்ப்பாணத்தில் நடந்த இந்துமாமன்ற ஆலயப்பிரவேசக்குழு ஆலோசனைக் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் நீதியரசர் திரு. சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் வி. ரி. பசுபதி முன்னாள் மாவட்ட நீதிபதி திரு ஈ. கே. கந்தசாமி, அட்வக்கேட் எஸ். பொன்னையா, திரு. எம். வைரமுத்து, திரு எஸ். அம்பிகைபாகன், திரு. எம். எஸ். கந்தையா, சைவப்புலவர் எஸ். வல்லிபுரம், திரு. எ. எம். செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

தீண்டாமையை ஒழித்துக் கட்டி ஒற்றுமையுள்ள ஒரு தமிழர் சமுதாயத்தை உருவாக்கவேண்டியது அத்தியாவசியமென பலர் வற்புறுத்திப் பேசினர்.கள்

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை தீவிரப்படுத்தி சகல துறைகளிலுமுள்ள பிரமுகர்களையும் ஒன்று சேர்த்து அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்பு மகாநாடு ஒன்றை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தமிழ்ப் பிள்ளைகளின் போதனமொழியை அரசாங்கம் சிங்கள மொழியாக மாற்ற முயற்சிப்பது நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்குமாதலால் இம்முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கம்

## தோட்டப் பாடசாலைகளை கையேற்க வேண்டும்

பருத்தித்துறை, செவ். "எவ்வித தாமதமுமின்றி அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளைக் கையேற்பதுடன் அப்பாடசாலை ஆசிரியரை [illegible] யரைப் பதவி நீக்கஞ்செய்ததைத்தொடர்ந்து நீதிமன்றங்களில்அவர்கள்நிரபராதிகள் எனத்தீர்ப்பளிககப்பட்டும், அவர்கள் மீண்டும் பதவியிலமர்த்தப்படாமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது:

தார்.

# 'கூட்டுறவுமுறையில்இளைஞர் தீண்டாமையை ஒழிக்கலாம்'

## சாவகச்சேரி எம். பி யோசனை

மட்டுவில், செவ்வாய். "நமது மத்தியில், எந்த வகையிலும் ஆபத்துவரும் போதுதான் நாம் விழிப்புணர்ச்சி அடைகிறோம். கடமையினை மேற்கொள்ள விளைகிறோம். இந்தநிலைமாறி எந்த ஒரு துறையிலும் ஆபத்தான கட்டம் வ வதற்கு முன்பே அதற்கேற்ற முறைகளையும் வழிவகைகளையும் சமாதானமான முறையில் நாம் கையாளவேண்டும்"

இவ்வாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதி நிறைவு விழா கொண்டாட்டக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

சாவகச்சேரி நகர சபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

அன்று நமது மத்தியில் மலேரியா நோய் ஆரம்பித்த போது, அக்கறை இன்றி இருந்த பொதுமக்கள் அதன் அபாயமான பலனைக் கண்டுகொண்டதின் பின், அதற்கான தடை நடவடிக்கைகளில் துரிதமாக முனைகிறார்கள்.

இன்று நமது மத்தியில் மலேரியா தடுப்பு எத்துணை அவசியமோ, அதேபோல எமது மத்தியில் தீண்டாமை ஒழிப்பு பற்றிய சிந்தனையும் அவசியமாகிறது. இந்த விஷயத்தில் குறிப்பாக இளைஞர்களே கூட்டுறவு முறையில் செயற்படத்துணிந்து இறங்கவேண்டும். இந்ததொண்டில் இறங்கும் இளைஞர்கள் மத்தியில் தீண்டாமை ஒழிப்புப்பற்றிய எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் இத்துறையில் வெற்றிபெற முடியும்.

# 'ஈழநாடு' 10-வது ஆண்டு

## விழாவை யொட்டி நடைபெற்ற

- ★ விளையாட்டுப் போட்டிகள்
- ★ அலங்கார, வர்த்தக ஊர்வலம்
- ★ விநோத உடைப் போட்டி
- ★ இலக்கியப் போட்டிகள்
- ★ மர்ம மனிதன் போட்டி
- ★ பேச்சுக் கட்டுரைப் போட்டிகள்
- ★ கலை நிகழ்ச்சிகள்
- ★ வாணவிளையாட்டுகள்

ஆகியவை பற்றிய சுவையான தகவல்களையும் மறக்க முடியாத சம்பவங்களையும் அந்தந்த நிகழ்ச்சிகளின் அமைப்பாளர்களாகவிருந்த திரு. ஏ. பாலசிங்கம் (யாழ். மத்திய கல்லூரி), திரு. வி. ரி. கணேசலிங்கம் (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), திரு. இ. கே. குமரையா (யாழ். அரசாங்க செயலகம்), திரு. என். பாலசுப்பிரமணியம் (யாழ். மாநகரசபை), திருமதி பி. குகதாசன் (வடபகுதி கல்வித் திணைக்களம்), திரு. இ. மகாதேவா (யாழ். இந்துக் கல்லூரி), திரு. எஸ். திருச்செல்வம் (ஈழநாடு) ஆகியோர் 'ஈழநாடு' தினசரியில் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!**

முகாமையாளர் நேற்று வெளியிட்ட அறிக்கைக்கு பதிலாக வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டுள்ளதாவது:-

ஈழநாடு பத்திரிகையில் வடபகுதி முகாமையாளர் 6 தொழிற்சங்கங்களுககும் நிர்வாகத்துககுமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளை உண்மைககுப் புறம்பான விதத்தில் திரித்து அறிககையில் காட்டியுள்ளார், இ.போ.ச. பஸ் ஊழியரின் 19 கோரிககைகளின் பேரில இம்மாதம் 4ம் திகதி பேச்சுவார்த்தை நடந்தது, பிரதேச முகாமையாளர் திருப்திகரமான பதிலளித்ததுடன் அலட்சியப்படுத்தியும் வேலை நிறுத்தத்தை தூண்டககூடிய தன்மையில பதிலளித்தார் அன்றியும் பத்திரிகை மூலமாக பொதுமககளின் கவனத்தை பஸ் தொழிலாளர்களுககு எதிராகத் திருப்பும்முயற்சியையும் மேற்கொண்டுளளார்,

12 கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது என்று உண்மைக்கு மாறாக கூறியதோடு, 7 கோரிக்கைகள் அரசாங்கம் சம்பந்தப்பட்டதென ள்ளார். ஆனால இக் கோரிக்கைகள் இ. போ. ச. சட்ட வரம் புக்குட்பட்டதோடு, மற்றும் டிப்போக்களில் நடைமுறையிலுள்ளதென்பதை அறியத்தருகிறோம். நிர்வாகம் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசியல திரை போட்டுதப்பித்துக் கொள்ள முயலவதோடு, பொதுமக்களின் வசதியையும், தொழிலாளரின் நன்மையையும் கருத்திற் கொண்டு செயலாற்றவிலலை எனவே நாம் நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டிய கட்டத்துகுத் தள்ளப்பட்டுள்ளோம்.

இ போ ச வடபிரதேச முகாமையாளர் உண்மையைத் திரித்துக கூறுபவர் என்பதற்கு முன்பு பத்திரிகைகளிலசாரதி, காப்பாளர்களுக்கு காற்சட்டை. சப்பாத்து, கால்மேஸ் முதலியன வழங்கப்பட்டது என்ற அறிக்கையைஅவர்விட்டதே எடுத்துக்காட்டு. அத்தனையும் உண்மைக்குப் புறம்பானது என்பதை தொழிலாளர்களின் சார்பில் தெரிவித்துககொள்கிறோம்.

## குடிதண்ணீர் கஷ்டம்

பருத்தித்துறை, செவ். கடும் வரட்சி காரணமாக பருத்தித்துறை நகரப் பகுதியில் குடிதண்ணீர் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது பருத்தித்துறை நகர சபை தனது வாகனங்களில் அல்வாய்ப் பகுதியிலிருந்து நீர் எடுத்து ஒவ்வொரு வீட்டுக்கும் கலன் ஒரு சதமாக தினசரி விநியோகம் செய்ய ஆரம்பித்துள்ளது.

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் 12-ம் தேதி நடந்த பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் கனிஷ்ட பிரிவிலும், சிரேஷ்டபிரிவிலும், இரண்டாம் இடத்தையும், மத்திய பிரிவில் முதலாம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

சும் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு, வே சிவஞானத்தின் "திருமுறைப்பா" இசையும் இடம்பெற்றது.

## சுகாதார வாரம்

இமையாணன், செவ். வடமராட்சிப் பகுதியில் அடுத்த மாதம் 22-ம் திகதி தொடக்கம் 28-ம் திகதி வரை ஏழுநாட்களுக்குச் சுகாதார வாரம் நடைபெற விருக்கிறது. இறுதி இரண்டு நாட்களான 27ம், 28-ம், திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானமும் சுகாதாரமும் சம்பந்தமும் அடங்கிய கண்காட்சி நடைபெறும் இறுதி நாளான 28ம் திகதி பொதுக் கூட்டமும் சுகாதாரம் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு சுகாதார மந்திரி வருவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

'ஈழநாடு' விழா

## இவருக்கு ஜாதிகச பத 50 ரூபா பரிசு!

"ஈழநாடு" பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர் நடாத்திய 'ஜாதிகசம்பத' சுவீப் டிக்கட் விற்பனையில்

**15 D 000321**

என்ற இலக்கமுடைய டிக்கட்டுக்கு ரூபா 50 பரிசாக வழங்கப்படவிருக்கின்றது.

இம்மாதம் 13-ம், 14-ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விற்கப்பட்ட ஜாதிகசம்பத டிக்கட்டுகளில் இந்த இலக்க டிக்கட் 50 ரூபா பரிசு பெறும் டிக்கட்டாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. 15 D 000321 இலக்கமுடைய இம்மாத ஜாதிக சம்பத டிக்கட்டை வைத்திருப்பவர் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் காட்டி 50 ரூபா பரிசையும் பெற்றுக் கொள்ளலாம்.

# "சொந்த வீடின்றி நிம்மதியற்ற வாழ்க்கை நடத்தி வந்தேன்"

## யாழ்ப்பாண சுவீப் அதிர்ஷ்டசாலி கூறுகிறார்

அளவெட்டி, செவ். 'எனது சுவீப் டிக்கெட்டுக்கு முதற்பரிசு விழுந்திருப்பதை 'ஈழநாட்'டில் முதல் முதலாகப் பார்த்தபோது என் கண்களில் ஏதாவது கோளாறு என்று நினைத்தேன்"

இவ்வாறு 250-வது சுவீப்பில் முதல் பரிசுபெற்ற 7 பிள்ளைகளுக்கு தந்தையான இணுவிலைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை செல்லையா கூறினார்.

இணுவில் வாசி எமது நிருபரிடம் பேட்டியில் தெரிவித்ததாவது-

"நான் ஏழை விவசாயி. நான் பலகாலமாக விவசாயம் செய்து அதன் மூலம் கிடைக்கும் சிறிய தொகையின் மூலம் குடும்பத்தை நடத்திவருகிறேன். ஆனால் இருக்க சொந்த வீடின்றி நிம்மதியற்ற வாழ்க்கை நடத்திவந்தேன் பலவருடங்களாக சுவீப் டிக்கட்டை தொடர்ந்து எடுத்துவந்தேன். எனக்கு ஏழு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் 5 பேர் பெண்கள், 2 பேர் ஆண்கள், எனது பெண் பிள்ளைகளில் மகேஸ்வரி (29 வயது), பரமேஸ்வரி (27 வயது), யோகம்மா (23 வயது) ஆகியோர் திருமணம் செய்து குடும்பம் நடத்துகின்றனர். மற்றும் சந்திராதேவி (17 வயது) இந்திராதேவி (13 வயது) ஆகியவர்கள் படித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆண் பிள்ளைகளில் சண்முகலிங்கம் (24வயது) கடையில் வேலைசெய்கிறார். கமலநாதன் (8வயது) படிக்கிறார்.

எனக்கு கிடைத்த பணத்தில் புதியகாணி வாங்கி வீடு கட்டுவது, பிள்ளைகளை படிப்பிப்பது, கடன்களை தீர்ப்பது ஆகியவையே என் எதிர் கால திட்டம்.

மாவிட்டபுரம்

# தடை உத்தரவு வழக்கு இம்மாதம் 27-ல் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,புதன் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தடைஉத்தரவு வழக்கு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மயில் நேற்றுக்காலை தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவ் வழக்கில் எதிர் மனுதாரரான சுந்தரலிங்கம் ஆலயத்திற்கு செல்லவிடாமல் தன்னை தடுப்பதாகவும் அப்படித் தடுப்பதற்கு அவருக்கு உரிமையில்லை யென்றும் தீர்ப்பு வழங்க கோரி ச. கணேசன் மனு தாக்கல் செய்திருந்தார்.

எதிர் மனுதாரரான சி.சுந்தரலிங்கம் நேற்று நீதிமன்றத்துக்கு வரவில்லை மனுதாரரான கணேசன் வந்திருந்தார்

தீர்ப்பை அறிவதற்கு நேற்று கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

பருத்தித்துறை, செவ். "எவ்வித தாமதமுமின்றி அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளைக் கையேற்பதுடன் அப்பாடசாலை ஆசிரியரைப் பயிற்சிக் கலாசாலையிலும் சேர்க்க வேண்டும்" என்னும் தீர்மானம் நேற்றுமுன்தினம் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு. வீ. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேல் வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

கல்வியமைச்சர் பல ஆசிரியரைப் பதவி நீக்கஞ்செய்ததைத்தொடர்ந்து நீதிமன்றங்களில்அவர்கள் நிரபராதிகள் எனத்தீர்ப்பளிககப்பட்டும், அவர்கள் மீண்டும் பதவியிலமர்த்தப்படாமை கண்டு இச்சங்கம் தனது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

அதிபர்கள் விசேட பதவிகள் ஆகியவற்றுக்கானபதவிகளுக்கு மனுப்பண்ணிப் பல மாதங்களாகியும் அவை நிரப்பப்படாமை கல்வி நிர்வாகத்துக்கு இடையூறுகுமாகையால அவை நிரப்பபடல் வேண்டும்.

கல்வியமைச்சரில் இச்சங்கம் தனது அவநம்பிக்கையைத் தெரிவிக்கிறது.

# 'தமிழினத்தை அழிக்க முயற்சிகள் நடக்கிறது'

## எஸ். ஜே. வி. எச்சரிக்கை

அளவெட்டி, செவ்வாய் "தமிழினத்துக்கிடையே உள்ள பிளவுகளை தென்னிலங்கை அரசியல் வாதிகள் பயன்படுத்தி எம் இனத்தை அழித்துவிட முயற்சிக்கிறார்கள். இதுவிடயத்தில் தமிழ் இளைஞர்கள் மிகவும் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்"

இவ்வாறு மாவிட்டபுரத்தில் நடைபெற்ற காங்கேசன்துறை தமிழரசு மாவட்டக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாற்றிய காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்நாயகம் கூறினார்.

இக்கூட்டத்தில் சீமெந்து தொழிற்சாலை ஊழியர் பிரச்சனைபற்றியும், தற்போது தொகுதியில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.

குழுத்தலைவர் திரு. இராசசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:-

மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் பிரச்னையில் நான் தலையிடவில்லை என சிலர் குறை கூறுகிறார்கள். நான் தலையிட்டிருந்தால் எனது கட்சி கொள்கையின் படி தீண்டாமை ஒழியவேண்டுமென்றே கூறியிருப்பேன். அப்படி சொல்லியிருந்தால் தான் எனக்கு சைவத்தை பற்றி தெரியாது என்று சொல்லியிருப்பார்கள்.

தீண்டாமையை மனமாற்றத்தாலேயேதீர்க்கமுடியும். பலாத்காரத்தாலோ, மதமாற்றத்தாலோ தீர்க்கமுடியாது.

சீமந்துதொழிற்சாலை தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியராக்குவது சம்பந்தமாகநானும் திரு.அமிர்தலிங்கமும்நடவடிக்கை எடுத்துள்ளோம். வேண்டிய விபரங்களைச் சேகரித்துத்தந்தால் நியாயத்தைஎடுத்துக்காட்டி வெற்றிபெறமுடியும்

தென்னிலங்கை அரசியல் வாதிகள் தமிழினத்தின் பிளவுகளைப் பயன்படுத்திச் சிங்களத்தைப் போதனமொழியாக்கப்பாக்கிறார்கள். சிங்களத்தைப்போதனமொழியாக ஏற்றுக்கொண்டால் தமிழினம் அழிந்துவிடும். வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளில் சிங்களத்தை போதனமொழியாக்க முயற்சிக்கிறார்கள் தமிழினத்தைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் முன்வரவேண்டும்.

வட்டுக்கோட்டைஎம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

நம் மத்தியில் ஒருசாரரார் மட்டும்தான் சிங்களம்படிப்பதும் மதம் மாறுவதும் என்று பாராமுகமாக நாம் விட்டுக்கொண்டிருந்தால் மலாயா நாட்டுத் தமிழரின் நிலைதான் இந்நாட்டுத் தமிழருக்கும் ஏற்படும். மலாய் நாட்டில் வாழ்ந்த தமிழர் தமது தொழிலுக்காக மொழியையும், மதத்தையும் மாற்ற எத்தனித்தார்கள்.

இன்று அவர்கள் மலாய்க்காரர்களாகவே மாறிவிட்டார்கள். இந்நிலை எமது மத்தியில் உருவாகாமல் தடுக்க நாம் சிந்தித்து நடக்கவேண்டும் என்றார்

மற்றும் பலரும் பேசினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்


## தேவை

தேவன்ஸ் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகளும், விற்பனைசெய்வதற்கு ஆண்களும் தேவை. நேரில் வரவும் 'தேவன்'ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1038

நன்நடத்தையும் தகுந்த கல்வியறிவுள்ள வரும் கோயிற்குருக்கள் சேவைக்கு முழுத்தகுதி வாய்ந்தவருமான பிராமணவம்ஷத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து கொழும்பு நகரிலுள்ள ஓர் கோயிலில் சேவைபுரிய ஒருவர் தேவை. தேர்ந்தெடுக்கப்படுபவர் வசிக்க வீட்டு வசதியுண்டு. மனுவுடன் மனுதாரை நன்கு அறிந்த இரு பிரமுகர்கள், அவர்களின் தொழில், விலாசம் முதலியன அறிவிக்கவும். இதற்குமுன் கோயிலிற் சேவை எதுவும் இருப்பின் சேவைக்காலத்துடன் கோயிலையும் குறிப்பிடுக. நேர்முகச் சம்பாஷணையின்போது சம்பளம் நிர்ணயிக்கப்படும். இதற்கான பயணச் செலவு கொடுக்கப்பட மாட்டாது. இப்பிரசுர நம்பரைக் குறித்து பத்திராதிபர் மூலம் 30-6-69-க்கு முன் மனுச் செய்க. விளம்பர இல.1031, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1031

## தேவை

யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்தி பரந்தாமன் இன்டஸ்றீஸ் நெல்லிரசம் மற்றும் பழரச பானங்கள் கொண்டுதிரிந்து விற்பதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். பரந்தாமன் இன்டஸ்றீஸ், அரியாலை, மாம்பழம்சந்தி, யாழ்ப்பாணம். 1041


## கல்விமந்திரிக்கு பாராட்டு

புலோலி, செவ்வாய்

கல்வி மந்திரி ஐ.எம்.ஆர். ஈரியகொல்லைக்கு இலங்கை பண்டிதர் சங்கதலைவர் பராடிதர் க.வீரகத்தி ஓர் பாண்ட்டு தந்தியை அனுப்பி உள்ளார்.

இலங்கை பண்டிதர்களின் தரத்தை ஒருபடி உயர்த்தியதை தொடர்ந்து மேற்படி பாராட்டுதந்தியை அனுப்பியுள்ளார்.

## உற்சவம்

அராலி செவ்வாய்

அராலி மேற்கு வண்ணபுரம் சிவன்கோவில் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமானது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவம் நிகழும்.


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ந்து காண்பிக்கப்படுகின்றது.
156- வது தினம்
ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45.
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
சிவாஜி - கே.ஆர். விஜயா நடித்த
தங்கை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45P.M.
SWORD AND THE DRAGON
(cinemascope)
From Tomorrow
Daily 4 Shows
YUL BRYNNER as the
Double Man

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
அசோகன் — மணிமாலா நடித்த
வல்லவனுக்கு வல்லவன்
(புதிய கொப்பி)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
James Coburn, Jean Hale
in
IN LIKE FLINT
(Cinemascope Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர் வரலக்ஷ்மி நடித்த

## மனேஜர் தேவை

கோண்டாவில் ப.நோ.கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. பின்வரும் தகுதியுடையவர்கள் 26-6-69 க்கு முன் கிடைக்கத்தக்கதாக காரியதரிசி ப.நோ.கூ. சங்கம் கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத்த பால் மூலம் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப் பிக்கவும்.

1. க.பொ.த பத்திரத்துடன்சாதாரண கூட்டுறவுப் பயிற்சிப் பத்திரமும்
2. வயது: 22—35
3. பிணை ரொக்கம் ரூபா ஆயிரம் ஆதனம் 2000

சம்பளம்: ரூபா 100 தொடக்கம் ரூபா150வரை. 1610

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி, 223 இலக்கக் கடையில் சோம. மு. இராமநுதன் அவர்களிடம் 1-1-64 தொடக்கம் 31-12-65 வரைக்கு வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 9-7-69 புதன் கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1609


## சுகாதார வாரம்

சுழிபுரம், செவ்வாய்

சுகாதார வாரத்தையொட்டி 'பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. எஸ். சபாநாதன் பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கிடையே பேச்சு, கட்டுரைப்போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். போட்டிகள் இவ்வார இறுதியில் நடைபெறும்.

# இன்றைய பலன்

ஆனி மாதம் 4-ம் திகதி

18-6-69

மேஷம்- தொழில்துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு. இதயப்படுதாவில் இன்

'ஈழநாடு' விழா

# உதைபந்தாட்டக் கிண்ணம் அன்ரனீசுக்கு கிடைத்தது

(நமது விளையாட்டு நிருபர் ''தேவா'')

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்பட்ட 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்துக்கான 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில், பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சாம்பியனுகியது.

இப்போட்டி, சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், வல்வெட்டித்துறை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் கோட்டை மைதானத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் மிக பரபரப்புடன் நடைபெற்றது. இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டி வீரர்களையும் யாழ். உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் டாக்டர் ஜே. சி. துரைசிங்கம், இவ் இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. எம். வி. ரத்தின வடிவேலுக்கு அறிமுகம் செய்து வைத்தார்

இப்போட்டி ஆரம்பமாகி 7 நிமிடங்களுக்குள், சென். அன்ரனீஸ் கோஷ்டியின் இடது முன்னணி வீரர் அன்ரனிப்பிள்ளை முதலாவது கோலைப் போட்டார். இதன் பின் வல்வெட்டிக் கோஷ்டியினர் இடைவேளைவரை எதிர்க் கோஷ்டியின் கோல் வாயிலை நோக்கி பலமுறை முன்னேறிய போதும் கோல்கள் எதுவும் போடாமல் விட்டுவிட்டனர். இடைவேளையின் போது சென். அன்ரனீஸ் கோஷ்டியினர் 1—0 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின பின், அன்ரனீஸ் கோஷ்டியின் வலதுகரை முன்னணி வீரர், சின்னமணி தலையால் அடித்து இரண்டாவது கோலைப் போட்டார். இதன்பின் சிறிது நேரத்தில் இக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் தேவகாந்தன் மூன்றுவது கோலைப் போட்டார். இதன் பின்னும் இக் கோஷ்டியினர் பல கோல்களை அடுக்கடுக்காக போட முயற்சித்தபோது வல்வெட்டிக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் மிகசாதுரியமாக தடுத்து நிறுத்திஞர். இச் சந்தர்ப்பத்தில் வல்வெட்டிக் கோஷ்டியின் பின்னணி வீரர் தேவசிகாமணி தமது கோஷ்டியின் சார்பில் ஒரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் சென். அன்ரனீஸ் கழகம், வல்வெட்டித்துறை யுனைட்டட்டை 3—1 கோல்களால் தோற்கடித்து சாம்பியனுகியது.

இப்போட்டிக்கு திரு. சற். சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றிஞர்

(தே. நி)

# காட்சி உதைபந்தாட்டத்தில் வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி, யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்பட்டு வந்த 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனுக வந்த பாஷையூர் 'சென். அன்ரனீஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், 'யாழ்ப்பாண தலைவர் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி'க்குமிடையில், 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவின் கடைசி நாளான 14-ம் திகதி மாலை யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற ''காட்சி உதைபந்தாட்டப் போட்டி'' வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இப்போட்டி ஆரம்பமாக முன் இவ் விழாவுக்கு பிர... வுக்கரசையும், யாழ். உதைபந்தாட்டச் சங்கத் தலைவரும், விளையாட்டமைச்சின் உதவி டைரக்டருமான டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் இரு கோஷ்டி வீரர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

இப் போட்டி ஆரம்பமாகியதும் இரு கோஷ்டி வீரர்களும், பாராட்டக் கூடிய விதத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடினர். இடைவேளைக்கு முன்னதாக யாழ். தலைவர் கோஷ்டிக்கு கிடைத்த கோல்கள் போடும் ஒரு சில சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டனர். இடைவேளையின் பின், சென். அன்ரனீஸ் கழகத்தினர் பலமுறை கோல்கள் போட முயன்ற போது, யாழ். தலைவர் கோ...

கொழும்புத்துறை

# ஆசிரிய கலாசாலை விளையாட்டு போட்டி முடிவுகள்

சுழிபுரம், செவ்வாய்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் விளையாட்டுப்போட்டி கலாசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

100 மீற்றர் ஓட்டம்: பே. பெனடிக்ற் (நீல இல்லம்), பா. பிரான்சீஸ் சேவியர் (மஞ்சள் இல்லம்), அ. பதுவைநாயகம் (பச்சை இல்லம்).

200 மீற்றர் ஓட்டம்: பா. பிரான்சீஸ் சேவியர் (மஞ்சள் இல்லம்), அ. ப பிகருடோ (பச்சை இல்லம்), க. யேசுதாசன் (நீல இல்லம்).

400 மீற்றர் ஓட்டம்: நீ. சந்தியாப்பிள்ளை (பச்சை இல்லம்), க. யேசுதாசன் (நீல இல்லம்), மு. கிருஷ்ணன் (மஞ்சள் இல்லம்).

800 மீற்றர் ஓட்டம்: சி. இராசரத்தினம் (பச்சை இல்லம்), நீ. சந்தியாப்பிள்ளை (பச்சை இல்லம்), இ. கனகேந்திரன் (பச்சை இல்லம்).

1500 மீற்றர் ஓட்டம்: சி. இராசரத்தினம் (பச்சை இல்லம்), யோ. மரியநாதர் (பச்சை இல்லம்), இ. கனகேந்திரம் (மஞ்சள் இல்லம்).

நீளம்பாய்தல்: பா. பிரான்சிஸ் சேவியர் (மஞ்சள் இல்லம்), சி. இராசரத்தினம் (பச்சை இல்லம், மு. குமாரசிங்கம் மஞ்சள் இல்லம்),

உயரம் பாய்தல்: ஆ. ப. பிகருடோ (பச்சைஇல்லம்), மு. மாணிக்கவாசகர் (மஞ்சள் இல்லம்), சை. ச. பீரிஸ் (பச்சை இல்லம்).

தத்திமிதித்துப் பாய்தல்: பே. பெனடிக்ற் நீல இல்லம்), சூ. மரியாம்பிள்ளை (மஞ்சள் இல்லம்), செ. கணேசலிங்கம் (மஞ்சள் இல்லம்).

பரிதிவட்டம்: பே. பெனடிக்ற் (நீல இல்லம்), சி. விஞயகமூர்த்தி (நீல இல்லம்), இ. இராயேந்திரம் (மஞ்சள் இல்லம்).

குண்டெறிதல்: சி. விஞயகமூர்த்தி (நீல இல்லம்), ஆ. ப. பிகருடோ (பச்சை இல்லம்), இராயேந்திரம் (மஞ்சள் இல்லம்).

200 மீற்றர் நடை: இ. நாகலிங்கம் (மஞ்சள் இல்லம்), அ. இராசலிங்கம் (நீலஇல்லம்), மு. தம்பி ஐயா (நீல இல்லம்).

1500 மீற்றர் நடை: அ. இராசலிங்கம் (நீல இல்லம்), யோ. மரியநாதர் (பச்சை இல்லம்), சு. நவரத்தினம் (பச்சை இல்லம்).

தடையோட்டம்: இ. நாகலிங்கம் (மஞ்சள் இல்லம்), இ. கனகேந்திரம் (மஞ்சள் இல்லம்), பே. பெனடிக்ற் (நீல இல்லம்).

4x100 அஞ்சல் ஓட்டம்: மஞ்சள் இல்லம், நீல இலலம், பச்சை இலலம்.

4x200 அஞ்சல் ஓட்டம்: மஞ்சள் இலலம், நீல இலலம். பச்சை இலலம்.

4x400 அஞ்சல் ஓட்டம்: நீல இலலம், மஞ்சள் இலலம், பச்சை இலலம்.

கயிறிளுத்தல்: 1-வதுஇடம் மஞ்சள் இலலம், 2-வது இடம்: நீல இலலம், 3-வது இடம்: பச்சை இலலம்.

மஞ்சள் இல்லத் தலைவர்: பா. பிரான்சீஸ் சேவியர்.

நீல இல்லத் தலைவர்: பே. பெனடிக்ற் (சாதனைவீர)

பச்சை இல்லத் தலைவர்: தொம்மைப்பிள்ளை.

விளையாட்டு அமைச்சர்: பா' பிரான்சிஸ் சேவியர்.

'தமிழ் மொழிமூலம் சேர்ந்தவர்களை

# சிங்களம் ஆங்கிலத்தில் சேவை செய்ய வற்புறுத்தக் கூடாது'

வெள்ளவத்தை, செவ்.

இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் தனது எட்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உத்தியோ பூர்வமாகப் பின்வரும் தீர்மானங்களை முன்மொழியவிருக்கின்றது. சங்கச்சார்பில் பொதுச் செயலாளர் திரு. வ. சிவபாலரத்தினம் பிரேரிக்விருக்கும் தீர்மானங்களில் சில வருமாறு:-

சிங்களம், ஆங்கிலம்ஆகிய மொழிகள் மூலம் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த ஊழியர்கள் அம் மொழிகளில் கடமையாற்றும் வாய்ப்பையும்அதே மொழிகளில் தமது சேவை அலுவல்கள் சலுகைகள் ஆகியனவை பற்றி அரசாங்கத்திடம் தொடர்பு கொள்ளும் வசதியையும் பெற்றிருப்பதுபோல தமிழ் மொழி மூலம் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு அம்மொழியில் கடமையாற்றும் வாய்ப்பையும் அதே மொழியில்தமது சேவை அலுவல்கள் சலுகைகள் ஆகியனவைபற்றி அரசாங்கத்துடன் தொடர்பு கொடுக்க வேண்டுமெனவும், மனிதாபிமானத்திற்கும் இயற்கை நியதிக்கும் முரணுன வகையில் தமிழ் மொழிமூலம் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களைச் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் சேவை செய்யும்படியோ அல்லது தேர்வு காணும்படியோ கேட்கக்கூடாது எனவும்சங்கம் அரசாங்கத்தை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறது.

புதிய சேவை அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டுமென நிபந்தனை விதிக்கும் 701-வது இலக்கத் திறைசேரி சுற்றறிக்கையை வன்மையாக எதிர்ப்பதோடு புதியசேவை சிங்கள அரசாங்க ஊழியர்களுக்கில்லாத எந்தவித பாகுபாட்டிற்கோ, தகவின்மைக்கோ அல்லது கட்டுப்பாட்டிற்கோ புதிய சேவைதமிழ் அரசாங்க ஊழியர்களை உள்ளாக்கக் கூடாதெனவும் புதியசேவை தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு சேவை உறுதிப்பாடு ஆகியனவற்றிற்குச் சிங்கள தேர்ச்சியை நிபந்தனையாக்கி கட்டாயப்படுத்தக் கூடாதெனவும், சர்வசன மனித உரிமைகள் பிரகடனத்தில் 21-வது உறுப்புரைக்கு முற்றிலும் விரோதமானதும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் தொழிலுரிமைகளை பறிப்பதுமன மேற்குறித்த திறைச்சேரிச் சுற்றறிக்கையை மீளப்பெறுவதுடன் புதியசேவை தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறும்காலம் வரை தொடர்ந்து சேவையிலிருக்கஅனுமதிக்கப்பட வேண்டுமென கேட்பதுடன் சிங்களத் தேர்ச்சி இல்லாதகாரணத்தால் எத்தனையோ

(4-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'

# புளுகுப்போட்டி--(8)

சென்ற போட்டிக்கு அநேகம் நேயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(புதிய கொப்பி)

in
IN LIKE FLINT
(Cinemascope Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

உயிரா மானமா

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த

திருமால் பெருமை

20-ந் திகதி முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)
ஆகிய திரைகளில் திரையிடப்பட இருக்கின்றது.
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
சிவாஜி, கே. ஆர். விஜயா
முத்துராமன், கீதாஞ்சலி, பாண்டியன்
நடித்த

நெஞ்சிருக்கும் வரை

மகத்தான 3-வது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
நடித்த

பொம்மலாட்டம்

கடைசி 2 தினங்கள் மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
★ ரவிச்சந்திரன் ★ காஞ்சனு
நடித்த

அதே கண்கள்
(ஈஸ்ட்மன் வர்ணச்சித்திரம்)

18-6-69

மேஷம்- தொழில்துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு. இதயப்படுதாவில் இன்பத்தின் பின்னல்.

ரிஷபம்- நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரிய மனிதர்களின் ஆதரவும் பெருகும்.

மிதுனம்- பணம் பாழாகும், பல வழிகளிலும் அளவுக்குமிஞ்சிய செலவுகள் ஏற்படும். நன்றே செய்யினும் குறைகேட்க நேரிடும்.

கடகம்- இடர்கள் பல தாக்கும், இதயத்தில் எரிமலை குமுறும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

சிம்மம்- தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையின் தரமும் உயரும். காதலர்கள் வாழ்வில் கற்கண்டான நாள்.

கன்னி- ஆபத்து மிகவுண்டு, அடுததுக்கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று.

துலாம்- தன்மான வாழ்வுடன் தனமுடைமை சேரும். தாயின் ஆதரவும் தவறுது கிடைக்கும். முயற்சிசெய் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்- இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பிரிந்தவர் கூடுவர். வேற்றுமைகள் மறையும்.

தனுசு- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள். பந்துக்களின் கொண்டாட்டம். துணிவே துணை.

மகரம்- பொறுமைக் கழுகுகள் வட்டமிடும், பொல்லாங்கு கேட்க நேரிடும். பிணை நிற்கும் விடயத்தைப் பின்போடுதல் நன்று.

கும்பம்- வியாபாரத் துறையில் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலால் பிணக்குகள் விளையும்.

மீனம்- இலட்சியப் பாதையில் வெற்றிநடை போடுவீர். உயர் வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும். பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை

14-ம் திகதி மாலை யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற ''சாட்சி உதைபந்தாட்டப் போட்டி'' வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி ஆரம்பமாக முன் இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட டாக்டர் கனகரத்னத்தையும், 'ஈழநாடு' ஸ்தாபன காரியதரிசி திரு திருநா தலைவர் கோஷ்டிக்கு கிடைத்த கோல்கள் போடும் ஒரு சில சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டனர். இடைவேளையின் பின், சென். அன்ரனீஸ் கழகத்தினர்பலமுறை கோல்கள் போட முயன்றபோது, யாழ். தலைவர் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் முறியடிக்கப்பட்டது, இரு கோஷ்டியினரும் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதுவும் போடாததால் ஆட்டம் 'சமமாக' முடிவடைந்தது.

இப் போட்டிக்கு திரு. ஜத்துருகுலசிங்கி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## நெசவாலை

பருத்தித்துறை, செவ். கிரவெட்டிப் பகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழ்ப் பெண்களுக்கான ஒரு நெசவாலையை நிறுவுவதில் அகில இலங்கை தமிழ்ப் பௌத்த சங்கம் ஈடுபட்டுள்ளது.

ஏக காலத்தில் 75 பெண்கள் பயிற்சி பெறக் கூடிய இந் நெசவுசாலைக்கு அரசாங்க மான்யமும் கிடைக்குமென்றும், அதேபோல இப் பகுதியிலுள்ள முடிக்குரிய நிலமொன்றும் ஒதுக்கப்படுமென்றும் தெரிகிறது. அதே நிலத்தில் ஒரு பலநோக்கு கூட்டுறவுச்சங்கமும் நிறுவப்படலாமெனவும் தெரிகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 18-6-69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-33 ஆங்கிலப்பயிற்சி, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் கீதம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 குங்குமம், 8 00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலிசை, 9-30 இசைநிகழ்ச்சி, 10 30 செய்திச்சுருக்கம்.

## நிர்வாகிகள்

அண்மையில் நடைபெற்ற செட்டிக்காடு பயிர்ச்செய்கைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கான தேர்தலில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

ஜனுப் ஈ எம் சுல்தான், திரு க சித்திரவேல், ஜனுப் யூ அப்துல்காதர் ஜனுப் யு எம் ஹனிபா, ஜனுப் ஏ எஸ் இப்ருஹிம், ஜனுப் எம் எச் முகம்மது, ஜனுப் எம் சம்சுதீன், திரு எச் டபிள்யூ வில்சன், ஜனுப் பீ ஜமால்தீன், ஜனுப் எம் முகைதீன் பாவா, ஜனுப் பி ஏ ஹஹீம், திரு க சி வேலாயுதபிள்ளை

0 0 0

## வேலைக்கு திரும்பினர்

திருக்கோணமலை கடற்படை மின்சாரப் பகுதி படை சரா ஊழியரின் வேலை நிறுத்தம் நேற்று முன்தினத்துடன் கைவிடப்பட்டது. இன்று சகலரும் வேலைக்குத் திரும்பினர்.

உடன் படிக்கை பற்றிய விபரங்கள் இன்னும் சரியாகக் கிடைக்கவில்லை.

இந்த ஊழியர்கள் தமக்கு ஆபத்து அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரி இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்ய உத்தேசித்திருந்ததும் சென்ற மாதம் 31-ம் திகதியே கடற்படை வீரர்களை இவர்களின் வேலை ஸ்தலங்களுக்கு அரசாங்கம் அனுப்பியதை ஆட்சேபித்து உடனடியாகவே இவர்கள் வெளியேறியதும் 'ஈழநாடு' ஏற்கனவே செய்தி பிரசுரித்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

(மஞ்சள் இல்லம்).

200 மீற்றர் நடை: இ. நாகலிங்கம் (மஞ்சள் இல்லம்), அ. இராசலிங்கம் (நீலஇல்லம்), மு. தம்பிஐயா (நீல இல்லம்).

## தாயகம் திரும்புகிறுர்

கோட்டை, திங்கள்

ஐக்கிய நாடுகளின் இலங்கைப் பிரதிநிதியும், ஐக்கிய நாடுகளின் தகவல் நிலைய நிர்வாகியுமான திரு. அனட்டொலி கிறமோவ் தாயகம் திரும்பவிருக்கிறுர். சுமார் 7 ஆண்டுகளின் பின்னர் இம்மாத இறுதிக்குள் தாயகம் திரும்பவிருக்கும். இவருடன் இவருடைய மனைவி திருமதி நைஞ கிறமோவும் பயணமாவார்.

## திறப்புவிழா

அல்லைப்பிட்டி, திங்கள்

புங்குடுதீவுசங்கத்தாகேணி ஸ்ரீபராசக்தி வித்தியாசாலை புதிய கட்டிடத் திறப்புவிழா இம்மாதம் முப்பத்தோராந் திகதி நடைபெற விருக்கிறது. தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ம. நவரத்தினம் இப்புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பார்.

## ஈழத்து எழுத்தாளருக்கு 1-வது பரிசு

யாழ்ப்பாணம், புதன்

ஈழத்து எழுத்தாளருக்கு சென்னையில் பரிசு கிடைத்திருக்கிறது. சென்னை வாசகர் வட்டம் வெளியிட்ட ஆறுகுறு நாவலைக் கொண்ட தொகுதியான 'அறுசுவை' என்ற நூல் விமர்சனத்திற்கே இப்பரிசு கிடைத்துள்ளது.

வாசகர் வட்டம் நடத்திய இவ்விமர்சனப் போட்டியில் ஈழத்து எழுத்தாளரும் 'கலைச் செல்வி' ஆசிரியருமான 'சிற்பி'க்கு முதலாவது பரிசும், தென்னிந்தியாவிலுள்ள பாலக்காட்டைச் சேர்ந்த திருமதி பத்ம கிரீஸ்வரனுக்கு இரண்டாவது பரிசும் கிடைத்திருப்பதாக வாசக வட்டம் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு முன் 'ஆனந்தவிகடன்' நடத்திய விமர்சனப் போட்டியிலும் ஈழத்தவரே முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆனந்த விகடன் போட்டியில் முதற் பரிசு பெற்றவர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளையாவர்.

## 'ஈழநாடு' புளுகுப்போட்டி--(8)

சென்ற போட்டிக்கு அநேகம் நேயர்கள் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவைப் பற்றி பிரமாதமாக புளுகித்தள்ளியிருந்தார்கள். சாதாரணமாக சுய பிரசாரத்தை நாம் விரும்புவதில்லை. ஆதலால் அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

### பரிசு பெறும் புளுகு

'இலங்கைப் படமாளிகைகள் அனைத்திலும் டிக்கட் பணத்துக்குப் பதிலாக அரிசி வசூலிக்கப்படுகிறது. இதனுல் நெல்லுக்குக் கிராக்கி ஏற்பட்டு விவசாயிகள் போட்டி போட்டுக்கொண்டு நெல் உற்பத்தியில் ஈடுபட்டதன் விளைவாக இவ்வாண்டில் இலங்கை தன்னிறைவையும் மிஞ்சிவிட்டது. இப்பொழுது அரசாங்கம் படமுதலாளிகளிடம் அரிசி கொள்வனவுசெய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உத்தேசித்திருக்கிறது'

இதை எழுதியவர்:- சி. அருணுசலம், இடைக்குறிச்சி, வரணி.

### பாராட்டுக்குரியவை

பின்வரும் நேயர்களும் போட்டிக்குழுவின் சிறந்த பாராட்டைப்பெற்றனர்:- கு. சிவானந்தன், டொலஸ்பாகே ரோட், நாவலப்பிட்டி. க.சி. இரசரத்தினம், 'இராச வில்லா', மூளாய். விகனகம்மா, பேராலை, பளை.

### அடுத்த போட்டி

எட்டாவது புளுகுப்போட்டிக்கு ஐம்பது சொற்களுக்கு மேற்படாத ஹாஸ்யமான கற்பனைப் புளுகு ஒன்றைத் தயார் செய்யுங்கள், பார்க்கலாம்.

### நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு புளுகுனுடம் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்பட வேண்டும். அனுப்பவேண்டிய விலாசம்: புளுகுப்போட்டி (8) 'ஈழநாடு' த. பெ இலக்கம். 49, யாழ்ப்பாணம்.

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம் எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ள வேண்டாம் ஈழநாடு ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-) பரிசுப் பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 22-6-69 வெற்றிபெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 26-6-69 இல் வெளியாகும்.

'ஈழநாடு'
புளுகுப் போட்டி-(8)

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கம்யூனிஸ்ட் கட்சி மகாநாடு ஒருநாள் முந்தியேமுடிகிறது

## சீனுவைக் கண்டிக்கும் தீர்மானம் இல்லை

மாஸ்கோ, ஜூன் 17

**மாஸ்கோவில் நடைபெறும் உலக கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு திட்டமிடப்பட்டதற்கு ஒரு நாள் முன்பதாகவே இன்று முடிவடைகின்றது. இந்த மகாநாட்டில் உலகெங்கிலுமிருந்து 75 கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.**

உலக கம்யூனிஸ்ட் கட்சியின் இறுதித் தீர்மானம் இன்று எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் உலகின் ஒருமைப்பாட்டையே இந்தத் தீர்மானம் அதிகமாக வற்புறுத்துவதாய் இருக்கும் என்று செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் ஹூஸாக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் டாங்கேயும் கூறினார்கள். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுபடுவதையே இந்தத் தீர்மானம் வற்புறுத்துவதாய் இருக்குமென்று டாக்டர் ஹூஸாக் கூறினார்.

மகாநாட்டின்போது செஞ்சீனுவின் போக்கைப் பல நாடுகளின் பிரதிநிதிகள் கண்டித்திருந்தார்கள். அதே சமயம் செக்கோஸ்லவாக்கியாவில் சோவியத் யூனியன் தலையிட்டதையும் ருமேனியா போன்ற நாடுகள் கண்டித்திருந்தன. ஆனால் மகாநாட்டின் இறுதித்தீர்மானத்தில் சீனுவைக் கண்டிக்கும் வாசகம் எதுவும் இடம்பெறவில்லையென்று கூறப்படுகின்றது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. பிரஸ்னேவும் சீனுவை வன்மையாகக் கண்டித்திருந்ததால் இறுதித் தீர்மானத்திலும் சீனுவைக்கண்டிக்கும் வாசகம் இடம்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இறுதித் தீர்மானத்தில் சீனுவை கண்டிக்கும் வாசகம் எதுவும் இடம்பெருதது குறித்து ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சாசெஸ்கோ மகிழ்ச்சி தெரிவித்தார். ஆனால் செக்கோஸ்லவாக்கியாவில் ரஷ்யத்தலையீடு சம்பந்தமாக இறுதித் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்வதற்காகத் தாம் தெரிவித்த ஆலோசனைகள் இடம்பெருதது குறித்து அவர் கவலை தெரிவித்தார். ஒரு கம்யூனிஸ்ட் நாடு அதன் உள் விவகாரங்களைத் தானே முடிவுசெய்து கொள்ள வேண்டும். அதன் பிரச்னைகள் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்னையாகக் கருதக்கூடாது என்பதே ருமேனியப் பிரதிநிதிகளின் யோசனைகளாகும். என்ருலும் இறுதித்தீர்மானத்தில் ருமேனிப்பிரதிநிதிகளும் கைச்சாத்திடுவார்கள் என்று தெரிகின்றது.

## ஆராய்ச்சி சுற்றுலா

லண்டன், ஜூன், 17

பிரிட்டிஷ் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் கல்லூரி மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட தூதுக்கோஷ்டியொன்று எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கும்தென்னிந்தியாவுக்கும் சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறது. இந்தப் புவியியல் ஆராய்ச்சி சுற்றுலாவை பிரிட்டனிலுள்ள சாம்ராஜ்ய நிறுவனம் ஒழுங்குசெய்து வருகிறது.

## அணு ஆயுத கட்டுப்பாடு விரைவில் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், ஜூன் 17

அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் அணு ஆயுத கட்டுப்பாடுகள் சம்பந்தமாகஜூலைமாத இறுதியில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகுமென்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு ரோஜஸ் அறிவித்துள்ளார்.

## ரயிலால் விழுந்த வாலிபர் இரண்டு நாட்களின்பின் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து நிலத்தில் வீழ்ந்த வாலிபர் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்களின்பின் மீண்டும் அறிவு திரும்பாமலேயே மரணமானுர்.

இந்தப் பரிதாப சம்பவம் பளைக்கு அருகாமையில் கடந்த 12-ம் திகதி காலையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் பீச்வீதியைச் சேர்ந்த மனுவல் பாக்கியநாதன் (21 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

கொட்டாஞ்சேனை அந்தோனியார் கோவில் திருவிழாவுக்கு 20 பேருடன் இவர் ரயிலில் சென்றுகொண்டிருந்தாராம். ரயில் கதவோரமாக இவர் சிகரட் புகைத்துக்கொண்டுநிற்கையில் தவறி நிலத்தில் வீழ்ந்தாராம். உடனே ரயில் சங்கிலியை இழுத்து, ரயிலைநிறுத்தி இவரை எடுத்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்களாம். 14-ம் திகதி இரவு இவர் மரணமானுராம்.

இத்தகவல்களை இவருடன் ரயிலில் பிரயாணம் செய்த சிறியதாயாரான ஜேமிஸ் பாக்கியம் மரணவிசாரணையில்தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் மேல்விசாரணையை இன்றுவரை ஒத்திவைத்தார். (கா. நி.)

அமெரிக்க வீரர்கள்

# சந்திரனிலிருநது 50 ருத்தல் மண் கொண்டுவருவர்

கென்னடிமுனை, ஜூன் 17

அமெரிக்கா அடுத்த மாதம் சந்திரனுக்கு அனுப்பவிருக்கும் செயற்கைக்கிரகத்தில் செல்லும் வீரர்கள் ஏற்கனவே திட்டமிடப்பட்டதற்கு இரண்டு மணி நேரம் பிந்தியே சந்திரனில் இறங்குவார்கள் வீரர்களின் ருெக்கட் பூமியுடன் செய்தித் தொடர்புகளை உடனே சரியான நிலையில் வைத்துக் கொள்வதற்கே இந்த ஏற்பாடாம்.

அவர்கள் பூமிக்குத் திரும்பும்போது சந்திரனிலிருந்து 50 இருத்தல் எடையுள்ள மண் கற்களைக் கொண்டு வருவார்கள்.

அமெரிக்க வானவெளி வீரர்கள்ஆம்ஸ்ட்டிராங் ஆல்டிரின் காலின்ஸ் ஆகியோர் அடுத்த (ஜூலை) மாதம் 16-ம் தேதி பூமியில் இருந்து சந்திர மண்டலத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

16-ம்தேதி இரவு 7-02மணிக்கு இவர்கள் கென்னடிமுனையில் இருந்து ராக்கெட் மூலம் வானவெளியில்செலுத்தப்படுவார்கள்

20ம்தேதி வீரர்கள் சந்திரனை நெருங்குவார்கள்.

20-ம் தேதி நள்ளிரவில் 'அப்பலோ-11' ராக்கெட் சந்திரனைச் சுற்றி பறந்து கொண்டு இருக்கும். அப்போது வீரர்கள் ஆம்ஸ்ட்டிராங் ஆல்டிரின் ஆகியோர் பூச்சிவடிவில் உள்ள கப்பலில் ஏறி தாய் ராக்கெட்டிலிருந்து பிரிந்து சந்திரனுக்கு செல்வார்கள். அப்பலோ-11 தாய் ராக்கெட் மட்டும் சந்திரனை சுற்றி பறந்து கொண்டிருக்கும். அதை வீரர் காலின்ஸ் இயக்கி சந்திரனை சுற்றி பறந்து கொண்டிருப்பார். ஆம்ஸ்டிராங்கும் ஆல்டிரினும் திரும்பி வரும்வரை மொத்தம் ஐம்பத்தொன்பதரை மணி நேரம் இந்த ராக்கெட் சந்திரனை சுற்றி பறந்து கொண்டு இருக்கும்,

சந்திர கப்பலில் பிரிந்து சென்ற ஆம்ஸ்டிராங். ஆல்டிரின் ஆகிய 2 வீரர்களும் 21-ந் தேதி அதிகாலை 1-51 மணிக்கு சந்திரனின் நிலப்பரப்பில் ராக்கெட்டை (சந்திரகப்பல்) இறங்குவார்கள்-

சத்திரனில் ராக்கெட் இறங்கிய பிறகு கீழே இறங்காமல் நீண்டநேரம் ராக்கெட் உள்ளேயே அவர்கள் இருப்பார்கள். அன்று(21-ந் தேதி) பகல் 11 39 மணிக்கு ராக்கெட் கதவை திறந்து கொண்டு ஆம்ஸ்டிராங் ஒரு ஏணி மூலம் சந்திரனின் நிலப்பரப்பில் முதல் மனிதனுக இறங்குவார். அவர் இறங்கிய பிறகு 27 நிமிட நேரம் கழித்து ஆஸ்டிரினும் கீழே இறங்குவார். இந்தக் காட்சி சந்திரக் கப்பலிலிருந்து டெலிவிஷன் படம் பிடித்து பூமியில் காட்டப்படும். வீரர்கள் இருவரும் சந்திரனில் மொத்தம் 21 மணி 38 நிமிட நேரம்தங்கி இருந்து பல சோதனைகள் நடத்துவார்கள்.

### கொடி நாட்டுவார்கள்

சந்திரனின் நிலப்பரப்பை தோண்டி 50 ராத்தல்எடைக்கு மண் கற்கள் ஆகிய வற்றை பூமிக்கு கொண்டு வருவதற்காக சேகரித்துக் கொள்வார்கள். அமெரிக்க கொடியை சந்திரனின் மீது நாட்டுவார்கள்.

பின்னர் அன்று நள்ளிரவில் ராக்கெட்டில் ஏறி 'அப்பலோ-11 தாய் ராக்கெட்டுடன் வந்து இணைந்து அதில் ஏறிக் கொள்வார்கள்

ராக்கெட் இணைந்த பிறகு மேலும் சில தடவைகள் சந்திரனை சுற்றி பறந்துவிட்டு பூமிக்கு புறப்படுவார்கள்.

24-ம தேதி இரவு சுமார் 10-23 மணிக்கு வீரர்கள் 3 பேரும் பசிபிக் கடலில் வந்து இறங்குவார்கள்.

### பிளேக் கிருமிகள்

சந்திரனின் நிலப்பரப்பில் இறங்கிவிட்டு திரும்புவதால் வீரர்கள் மூலமாக பூமிக்கு 'பிளேக் கிருமிகள் தொற்றிக்கொண்டு வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எனவே அப்பலோ-11 வீரர்கள் பூமிக்கு திரும்பியதும் 3 வாரகாலம் அவர்களை தனி இடத்தில்வைத்துமருத்துவசோதனைகள் நடத்த திட்டமிட்டு இருக்கிருர்கள்.

# சீன வெளிநாட்டுக் கொள்கை சோஷலிஸத்தை இழந்துவிட்டது

## பிரஸ்னேவ் கூறியது

மாஸ்கோ, ஜூன் 17

கடந்த வாரம் உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. லியோனிட் பிரஸ்னேவ் சீனத் தலைவர்களைக் கண்டித்துப்பேசினுர். 'டாஸ்' வெளியிட்டுள்ள செய்தியில் சீனத்தலைவர்கள் திரு. பிரஸ்னேவ் கண்...

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சிகளை எதிர்த்தும் சீனத் தலைமை நடத்தும் போராட்டம் அதன் பெரிய வல்லரசு அங்கலாய்ப்புகளுடன், பிற நாடுகளின் பிராந்தியங்கள் மீது அது முன்வைக்கும் பாத்தியதைகளுடன் மிக...

வர்க்க உள்ளடக்கத்தையும் அதுஇழந்துவிட்டது. சோவியத் யூனியனும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஒன்றெனக்கருதப்படுகிறது. இப்போது பீக்கிங்கின் அயல்நாட்டுக் கொள்கை சோவியத் யூனியனுக்கும் ஏனைய சோஷலிஸ நாடுகளுக்கும் எதிராகத் திருப்பிவிடப்பட்டுள்ளது.

அரசாங்க திட்டங்களுக்கு

# ஆயுள்வேத வைத்தியர் சங்கம் வரவேற்பு

அல்லைப்பிட்டி, செவ்.

அகில இலங்கை சித்த ஆயுள் வேத வைத்திய சங்கக் கூட்டம் யாழ்ப்பாணம் இலங்கை ஆயுள்வேத வைத்தியப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது ஆயுள்வேத வைத்தியர்களுக்கு அரசாங்கம் அளிக்கவிருக்கும் திட்டங்கள்பற்றி ஆராயப்பட்டது.

''பதிவுசெய்யப்படாத வைத்தியர்கள் யாவரையும் பதிவுசெய்யக்கூடிய வகையில் விண்ணப்பமுடிவுத் திகதியை இவ்வருடம் மார்கழி மாத முடிவுவரை நீடிக்கப்பட்டதை சங்கம்... சங்கங்களை நிறுவி எல்லா சுதேச வைத்தியர்களும் இத்திட்டத்தினுல் பயன்படவழிசெய்யவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது

வடபகுதியில் 'பொக்கணை' என்னும் நிலத்தையும் மன்னூரில் 'தள்ளாடி' என்னும் நிலத்தையும் மருந்து மூலிகைகள் உற்பத்திக்கு ஒதுக்க வேண்டுமெனவும் அரசினரைக்கேட்டுக் கொண்டது.

அடுத்துவரும் சங்க வருடாந்தக் கூட்டத்தை கொழும்பு ஆயுள்வேதவைத்தியக்கல்லூரி மண்டபத்தில் கூட்டுவதெனவும், அக்கூட்டத்துக்கு சுகாதார அமைச்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முஸ்லிம் கல்விபற்றி பதியுதீன் என்றுமேஎன்னுடன் பேசவில்லை'

## உள்நாட்டமைச்சர் 'தஹா' கூறுகிருர்

கோட்டை, செவ்வாய்

''ஜனுப் பதியுதீன் மஹ்மூத் முழுப் பொய்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிருர். திரு. தகநாயக்கா கல்வி அமைச்சராக இருக்கையில் முஸ்லிம் மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் குறித்து தானே ஒரு திட்டத்தை வரைந்ததாகவும் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா இதனைச்...

### மஹ்மூத் கதைத்த ஒரேயொரு விஷயம்

ஜனுப் பதியுதீன் மஹ்மூத் எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது என்னுடன் முஸ்லிம் கல்வி சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கவில்லை. அவர் என்னுடன் கதைத்த விடயம் ஒன்று உண்டென்ருல் அது அவர், ஆசிரியராக இருக்கையில் ஐக்கியநாடு...

## ஐவரை பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

டோர்ச்லைட் இரவல்கேட்டபோது அதனைக் கொடுக்க மறுத்த ஒருவர் படுமோசமாக அடி வாங்கியும்,...

சியின் பொதுச் செயலாளர் திரு. லியோனிட் பிரஸ்னேவ் சீனத் தலைவர்களைக் கண்டித்துப் பேசினார். 'டாஸ்' வெளியிட்டுள்ள செய்தியில் சீனத்தலைவர்களை திரு. பிரஸ்னேவ் கண்டித்துள்ள பகுதி வருமாறு:

மார்க்ஸிஸ லெனினிஸத்திலிருந்து பிறழ்ந்துபோவது பொது இலட்சியத்திற்கு எத்துணை ஹானியை ஏற்படுத்தும் என்பதற்கு சீனத் தலைமை மேற்கொண்ட நிலை ஒரு ஸ்பஷ்டமான எடுத்துக்காட்டாகும் என்று லியோனிட் பிரெஷ்னவ் கூறினார். உண்மையைச் சொல்லுவதானால் மகாநாட்டில் இப்பிரச்னையை எடுப்பதில்லை என்றே நாம் எண்ணியிருந்தோம். ஆனால் சமீப காலத்துச் சம்பவங்கள், குறிப்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது காங்கிரஸ் எடுத்த முடிவுகள் இதுபற்றிப் பிரஸ்தாபிக்க எம்மை நிர்ப்பந்தித்துள்ளன என்றார்.

தமது கருத்துக்களையும், நோக்கங்களையும் ஏற்காத கட்சிகள் அனைத்தையும் 'திரிபுவாதிகள்' என பீக்கிங் தலைவர்கள் வர்ணிக்கிறார்கள் பீக்கிங்கின் சீர்குலைவு நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ள நஷ்டத்தைக் குறைத்துக்கணக்குப் போடலாகாது என்று பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்.

சீனத் தலைமை நடத்தும் போராட்டம் அதன் பெரிய வல்லரசு அங்கலாய்ப்புகளுடன், பிற நாடுகளின் பிராந்தியங்கள் மீது அது முன்வைக்கும் பாத்தியதைகளுடன் மிக நெருக்கமாக இணைந்துள்ளது.

சோவியத் திரிபுவாதத்தை எதிர்த்து நவீன ஆயுதங்களுடனும், அணு ஆயுதங்களுடனும் போர் தொடுப்பதற்குத் தயாராகுமாறு விடுக்கப்படும் அறைகூவல்கள் சீனாவில் கேட்கப்படுகின்றன. வெறும் வெற்றுக் கூச்சல்கள் சாத்தியப்பாடுகளிலிருந்து வெகுதூரத்திலுள்ளன என்பது வாஸ்தவமே. தன்னைப் பாதுகாக்க சோவியத் யூனியனிடம் போதிய பலமிருக்கிறது சோவியத்மக்களினது நரம்புகளும் உறுதியானவை என்றார் பிரஸ்னேவ்.

சோவியத் யூனியன் சீனவைத்தாக்க விரும்புகிறது என்ற கருத்து சீன மக்களின் மனத்தில் திணிக்கப்படுகிறது. சோவியத் மக்கள் யாரையும் தாக்கியதுமில்லை, தாக்கவிரும்பவுமில்லைஎன்று பிரஸ்னேவ் வலியுறுத்தினார்.

சீன வெளிநாட்டுக் கொள்கைநடைமுறையில் தொழிலாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்து பிறந்துவிட்டது என்பதுடன், சோஷலிஸனக்கருதப்படுகிறது. இப்போது பீக்கிங்கின் அயல் நாட்டுக் கொள்கை சோவியத் யூனியனுக்கும் ஏனைய சோஷலிஸ நாடுகளுக்கும் எதிராகத் திருப்பிவிடப்பட்டுள்ளது.

எல்லை விவகாரம் பற்றிய பிரச்னைகள் மீதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது என்ற சோவியத் ஆலோசனைக்கான பதிலாக சீன அரசாங்கம் அதன் சமீபத்திய அறிக்கையில் பேச்சுவார்த்தைநடத்துவது என்ற கருத்தை நிராகரிக்கவில்லை. எல்லையில் மோதலைத் தவிர்ப்பதற்கான விருப்பத்தின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இந்த அறிக்கை பெருமளவில் வரலாற்றை புரட்டுவதாகவும், நவீன காலத்து உண்மைகளைத் திரிப்பதாகவும், சோவியத் நாட்டை எதிர்த்த குரூரமான குரோதத் தாக்குதல்களைக் கொண்டதாகவும்உள்ளது என்றார். சீன அறிக்கைக்கு நாம் பதிலைத் தயாரித்துவருகிறோம் என்று பிரஸ்னேவ் குறிப்பிட்டார். இந்தப் பதில் வேறுபாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வது சமமானபயனை ஒத்துழைப்பைப்பேணுவது என்றஎமது கோட்பாட்டு நிலைக்கு முற்றிலும் ஏற்றதாகவே இருக்கும்.

'உலக மொழிகளில்

# தமிழுக்கு மட்டுமே விழாஎடுக்கப்படுகிறது'

### பண்டாரவளை தமிழ்த்தின விழாவில் உரை

பண்டாரவளை, செவ்.

''உலகத்திலே மொழியின் பெயரால் விழா எடுப்பவர்கள் தமிழர்களேயன்றி வேறெவருமல்லர். உலகின் ஆதிமொழிகளுள் மூத்த மொழி தமிழ்மொழி அதனால் இதனை இறைவன் அளித்த மொழி எனத் தமிழ்மக்கள் நம்புகின்றார்கள். இறைவனையே தமிழாகவும் போற்றி வணங்கும் பெரும் பண்பு தமிழர்களிடமுண்டு. தமிழைத் தம் வாழ்வாக, உயிராக மதிப்பவர்கள் தமிழர்கள் உயர் தனிச் செம்மொழியாகிய தமிழை மென்மேலும் வளர்ப்பதும் வலுவடையச் செய்வதும் நம் அவரினதும் கடமையாகும்.'' எனப் பண்டாரவளை வட்டாரத்தமிழ்த் தினப் பரிசளிப்புவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட திரு. இ. சிவலிங்கம் குறிப்பிட்டார். வட்டாரக் கல்வி அதிகாரிதிரு. மனோகரன் கோவிந்தராஜ் தலைமையில் பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவை திரு. இர. சிவலிங்கமும் தமிழ்த்தின விழாக் குழுவின் உபதலைவர் திரு. சி. சிவசரவணபவனும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். வட்டாரத்திலுள்ள கனிஷ்ட மஹா வித்தியாலயங்கள் அனைத்தும் விழாவிற் கலந்து கொண்டன. திரு. சிவசரவணபவன் வரவேற்புப் பாவாரம் சூடினார்.

திரு மனோகரன் கோவிந்தராஜ் அவர்கள் தமது தலைமையுரையில் வெகு தொலைவில் போக்குவரத்து வசதிக் குறைவான பாடசாலைகளிலுள்ள மாணவர்களும் சிங்களப் பாடசாலைகளிலுள்ள தமிழ் மாணவர்களும் பரிசுகள் பலவற்றைப் பெற்றிப்பது, பட்டினப் பாடசாலைகளுக்குக் கஷ்டப்பட்டுப் பிள்ளைகளை அனுப்புவதில்விசேட நன்மை ஏதும் இல்லை என்பதைக் காட்டுவதாவும் இவ் வட்டாரப் பாடசாலைகள் அனைத்திலும் ஏறக்குறைய ஒரே தரமான உயர் கல்வி அளிக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார். எழுத்து, வாசிப்பு, பா ஓதல் சொற்பொழிவு நாடகம் முதலிய பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குத் திருமதி சரஸ்வதி சிவலிங்கம் பரிசுகளை வழங்கினார். நன்றியுரை கூறிய திரு. து. தர்மலிங்கம் அகில இலங்கையிலும் முதன் முதலாக மிகச் சிறப்பான முறையில் தமிழ்தின விழாவைக் கொண்டாடிய பெருமை பண்டாரவளை வட்டாரத்திற்கே உரியது எனக் குறிப்பிட்டார்.

''பதிவுசெய்யப்படாத வைத்தியர்கள் யாவரையும் பதிவுசெய்யக்கூடிய வகையில் விண்ணப்பமுடிவுத்திகதியை இவ்வருடம் மார்கழி மாத முடிவுவரை நீடிக்கப்பட்டதை சங்கம் வரவேற்பதுடன் விண்ணப்பங்களைப்பூர்த்தி செய்வதில் சங்கம் சகல உதவிகளைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கம் கேட்டுக் கொண்டபடி நாவின்னை அவுடறே உற்பத்திச் சாலையை ஓர் கூட்டுஸ்தாபனத்துடன் ஒப்படைப்பதையும்மேற்படி சங்கங்கத்தில் உபதலைவர்களில் ஒருவராகிய டாக்டர் ஏ. கனகரெத்தினத்தை நிர்வாகத்தர்களில் ஒருவராக நியமித்ததையும் வரவேற்றுக்கொண்டது.

தட்டுப்பாடான மருந்துச் சரக்குகளை மேற்படி கூட்டுத்தாபனமே இறக்குமதி செய்து அவற்றைப் பதிவுசெய்யப்பட்ட சங்க மூலம் அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இச்சங்கத்தின் கிளைச்னரைக்கேட்டுக் கொண்டது.

அடுத்துவரும் சங்க வருடாந்தக் கூட்டத்தை கொழும்பு ஆயுள்வேதவைத்தியக்கல்லூரி மண்டபத்தில் கூட்டுவதெனவும், அக்கூட்டத்துக்கு சுகாதார அமைச்சர், ஆயுள்வேத ஆணையாளர் ஆகியோரை வரவழைப்பதெனவும் வெளியூர்களிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு வாகன வசதி, தங்குமிடவசதி, உணவு வசதி, இவற்றைச்செய்து கொடுப்பதெனவும், தீர்மானிக்கப்பட்டது. சிங்கள வைத்திய சங்கங்களின் முக்கியஸ்தர்கள் பலர் இதில் பங்குகொள்ளவும் சங்கத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும் முன்வந்திருக்கிறார்கள். ஆடிமாத நடுப்பகுதியில் மேற்படி கூட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 330 பேர் தெரிவு

கோட்டை, செவ்வாய்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் பௌதிகப் பகுதி பொறியியல் பகுதியாகியவற்றில் கல்வி கற்க 330 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர்களில் 150 பேர் பொறியியல் பகுதிக்கும் 180 பேர் பௌதிகப் பகுதிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மரண தண்டனை

காலி, செவ்வாய்

சமீபத்தில் காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெட்சர் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட வழக்கொன்றில் 70 வயதுக்கு மேற்பட்ட எம். என். சைமன் என்ற வயோதிபர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு நீதியரசரால் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

சைமன் என்றஇந்தவயோதிபர் தனது மருமகளின் தாயாரான ஆர். பி. செய்னு என்பவரைநித்திரை செய்து கொண்டிருக்கும்போது கத்தியால்வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## கொழும்புத்துறை ச. ச. நிலையம்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் நிலையத்தின் புதிய தலைவராக திரு. எஸ். கே. யோகசாமி ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் தலைவர் திரு. சி. கணேஷ் இராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து புதிய தலைவர் தெரிவு நடைபெற்றதாக நிலையக் காரியதரிசி திரு. சி. வரதராசா அறிவித்தார் நிலையத்தின் சார்பில் இராப்பாடசாலை நடத்துவதென்றும் சபையில் ஆலோசிக்கப்பட்டது.

## முதலிடம்பெற்றார்

மூதூர், செவ்வாய்

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை விவசாய அபிவிருத்திப் போட்டியின் கீழ் பாடசாலை, கல்லூரிகளுக்கிடையிலே நடைபெற்ற வீட்டுத்தோட்டப்போட்டியில்புனித அந்தோனியார் பாடசாலையைச் சேர்ந்த செல்வி. ஒ, பாக்கியவதி முதலிடத்தை பெற்றவர்களில் ஒருவர் ஆவார். இதற்குரிய சான்றிதழ் கல்வி அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது,

இவர் அகிலஇலங்கை விவசாயப்போட்டியில் கீழ் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிவெட்டி அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் என். எஸ். ஒப்பிலாமணியின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியிட்டிருக்கிறார். திரு. தகநாயக்கா கல்வி அமைச்சராக இருக்கையில் முஸ்லிம் மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் குறித்து தானே ஒரு திட்டத்தை வரைந்ததாகவும் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா இதனைச் செயற்படுத்துமாறு தகநாயக்காவைக் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறி இருக்கிறார். முஸ்லிம் கல்வியைப் பற்றி எந்தவிதமான ஒரு திட்டத்தையும் செயற்படுத்துமாறு காலஞ்சென்ற பண்டாரநாயக்கா கேட்கவும் இல்லை, அறிவுரைகளைத் தரவுமில்லை.''

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் காலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஜனாப் பதியுதீன் மஹ்மூத் ஒரு திடுக்கிடும் செய்தியை வெளியிட்டிருக்கின்றார். அக்கூட்டத்தின் விபரங்களையிட்டுப் பத்திரிகையில் வெளியாகிய அறிக்கையையும் மேலே குறிப்பிட்டிருந்தேன்.

## என் தீர்மானப்படியே செய்தேன்

முஸ்லிம் கல்வியைப் பற்றி நான் செய்துகொண்ட எல்லாச் சீர்திருத்தங்களும் எனது தீர்மானங்களின்படியும் முடிவுகளின் படியும் செய்து கொண்டவையேயாகும். சந்தர்ப்பங்கள் ஏற்படும்பொழுது இச்சீர்திருத்தங்களை எவரையும் கலந்தாலோசிக்காது நானே செய்தேன். நான் இந்த விடயத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறேன். அத்துடன் நான் என்ன செய்கிறேன் என்பதும் எனக்குத் தெரியும். காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா என்மேல் முழு நம்பிக்கையையும் வைத்திருந்தார். நான் செய்துவந்த சீர்திருத்தங்களில் தலையிடும் அளவிற்கு அவர் அற்ப குணம் படைத்தவருமல்லர். இப்படியான நடவடிக்கைகளினால் அந்தப் பெரிய மனிதராகிய காலஞ்சென்ற பண்டாரநாயக்காவுக்கு ஜனாப் பதியுதீன் மஹ்மூத் ஒரு பெரும் மரியாதையீனத்தை செய்கின்றார். பண்டாரநாயக்கா இப்படியான ஒரு திட்டத்தை தந்திருந்தால் அவர் பேசிய பல சந்தர்ப்பங்களில் இதனைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது என்னுடன் முஸ்லிம் கல்வி சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கவில்லை. அவர் என்னுடன் கதைத்த விடயம் ஒன்று உண்டென்றால் அது அவர், ஆசிரியராக இருக்கையில் ஐக்கியநாடுகள் சபைக்கு முழுச் சம்பள விடுதலையுடன் செல்வது சம்பந்தப்பட்டது தான். இது முஸ்லிம் கல்வி சம்பந்தமான ஒரு பெரிய விடயம். இது பதியுதீன் கல்வி சம்பந்தமான ஒரு விடயம்.

முஸ்லிம் மக்களுக்கு நான் அளித்த வரப்பிரசாதங்களைக்கொண்டு பெயர் எடுப்பதற்கு ஜனாப் பதியுதீன் மஹ்மூத் சிறுபிள்ளைத்தனமாக முயற்சிக்கின்றார்.

முஸ்லிம் கல்விக்காக நான் செய்த சில நல்லவற்றை அவர் அழித்துவிட்டார். உதாரணமாக, நான் கண்டியிலும் காலியிலும் நிறுவிய, சிறந்த இரு முஸ்லிம் ஆசிரிய கலாசாலைகளை நாட்டின் பல பாகங்களிலும் இருக்கும் முஸ்லிம் மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது மூடிவிட்டார். இந்த இரு முஸ்லிம் ஆசிரிய கலாசாலைகளும் ஜனாப் பதியுதீன் மஹ்மூத்தின் திட்டத்திலிருந்ததா?

## தலைவரைக் கண்டித்துத் தீர்மான

காலி, செவ்வாய்

தபால்தந்தித் தொடர்பதிக்ராரிகள் சங்கத்தின் காலிக் கிளையின்வருடாந்த பொதுக் கூட்டத்தில் வேலைநிறுத்தத்தின்போது இச்சங்கத்தின் தலைவரின் நடவடிக்கையைக் கண்டிக்குமுகமாக ஒரு தீர்னம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் காலிக்கிளைத் தலைவரின் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய காலி உதவித் தபால் அதிபர் திரு, ஜி. பி. டபிள்யு பியசேன தாய்ச்சங்கத்தின் தலைவரைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். திரு. யு. எஸ். பெரேரா பேசுகையில் இந்த சங்கத் தலைவர்களுக்கு சங்க அலுவல்களில் போதிய திறமை இல்லாத காரணத்தினாலேயே அங்கத்தவர்களைஅரசியல் தலைவர்களிடம் அனுப்புகிறார்கள் என்ற கண்டனத் தீர்மானத்தைப் பிரேரித்தார். திரு. டி. டபிள்யு. பொன்னம்பெருமாஇப்பிரேரணையை அனுமதித்துப்பேசினார்.

## தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

டோர்ச்லைட்இரவல்கேட்டபோது அதனைக் கொடுக்க மறுத்த ஒருவர் படுமோசமாக அலவாங்காலும், பொல்லுகளாலும் தாக்கப்பட்டாராம்.

அளவெட்டியில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இச் சம்பவத்தில் ஒரு கால்முறிந்து, தலையில் வெட்டுக் காயத்துடன் சின்னப்பொடியன் முத்தன் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தனிமையில் தான் சென்று கொண்டிருக்கையில் மணியம் என்பவர் தன்னிடம் டோர்ச் லைட்டைக் கேட்க, தான் கொடுக்க மறுத்ததால் இராசதுரை, செல்லையா, பசுவன், தம்பிமுத்து ஆகிய நால்வரும் அலவங்காலும், பொல்லுகளாலும் தாக்கியதாக இவர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் ஐவரையும் சுன்னாகம் பொலிஸார் தேடி வருகின்றனர்.

(கா. நி)

## நியமனம்

உடுப்பிட்டி, செவ்,

கட்டைவேலி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை தலைமை ஆசிரியராக திரு. எஸ். எஸ். வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கரணவாய் தெற்கு அரசினர் கலவன் தமிழ் பாடசாலையில் உதவி தலைமைஆசிரியராக கடமையாற்றியவர். கடந்த ஒன்றரைவருட காலமாக தலைமை ஆசிரியர் நியமிக்கப்படாமல் இருந்ததை உடுப்பிட்டி எம். பி, சுட்டிக்காட்டி தலைமை ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

## அஞ்சல் சங்கக் கூட்டம்

வெள்ளவத்தை, செவ்வாய்

இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20-ந் திகதி கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலைப் பிரச்சாரச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1969 — 70-ம் ஆண்டிற்குரிய சங்க நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும். தலைவர் பதவிக்கும் துணைச் செயலாளர் பதவிக்குமே போட்டி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஓநாய் மீது குற்றம்சாட்டுவதினல் ஆட்டுக்குப் பலன் எதுவுமில்லை. ஆடு ஓநாயின் பிடியில் விழாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மாதம் 4-ந் திகதி (18-6 69)


## விவசாயிகளின் சேமிப்பு

இருபத்தோராயிரத்து நூற்றிஎண்பத்தைந்து விவசாயிகள் கிராம வங்கிகளில் நாற்பத்திரண்டு லட்சம்ரூபாய் சேமிப்புக் கட்டணமாகவைத்துள்ளனர். 1966-ம் ஆண்டில் கிராம வங்கிகளின் எண்ணிக்கை எட்டாக இருந்தது. இப்போது அது ஐம்பத்தி ஆருக உயர்ந்திருக்கிறது. இது கட்டாயச் சேமிப்பு அல்ல: தாமாகவே விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபத்தில் கூட்டுறவு வங்கிகளில் பணத்தை சேமிக்கின்றனர்.

கிராமப்புற வங்கிகளில் விவசாயிகள் சேமித்து கட்டுப்பணமாக வைத்துள்ள பணத்திலிருந்து 21 வங்கிகள் அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றுக்கு கடன்வழங்கியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறு கைத்தொழில் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் கால்நடை அபிவிருத்திக்கு இப்பணம் உதவப்பட்டிருக்கிறதாம். உணவு உற்பத்திஅதிகரிப்பு இயக்கத்தின் வெற்றிகளில் இதுவுமொன்ருக இருக்கலாம். உணவு உற்பத்தியை இங்கு அதிகரிப்பதன் மூலம் உணவில் தன்னிறைவு காண்பதுமட்டுமல்லாமல் இங்கு கைத்தொழில்களை அபிவிருத்திசெய்வதற்கு வெளிநாட்டு மூலதனத்தை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமில்லையென்பதையும் உணவுப்பொருள்களுக்காகவும் நமக்குத் தேவையான இதர பொருள்களுக்கும் வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை யென்பதையும் விவசாயிகளின் இச்சேமிப்புத் திட்டம் எடுத்துக்காட்டுகிறது. இத்திட்டத்தை இன்னும் சிறந்தமுறையில் நாட்டின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரித்தால் அதிக பயன் கிடைக்கலாமென்று எதிர்பார்க்கலாம்.

சில சமயங்களில் விதைநெல் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதில் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாக நேரிடுகிறது. இச்சமயத்தில் விவசாயிகள் சுலபமாக கடன் வசதிகளைப் பெறுவதற்கும், வெள்ளம், வறட்சி ஆகிய இயற்கையின் சீற்றங்களினுல் பயிர் அழிவு ஏற்படும் போது விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம்கிடைக்கவும் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் நஷ்டஈடு கிடைக்கவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். விவசாயிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்பட்டால் தான் அவர்கள் உபஉணவுஉற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தில்தீவிரமாக ஈடுபடவும் அதன்மூலம் கைத்தொழில் உற்பத்திக்கு உதவவும் வழிபிறக்கும்.

## பிரான்சின் புதிய அதிபர்

ஜெனரல்டிகோல் பதவி துறந்த பின்னர் பிரான்சின் புதிய அதிபராக திரு. ஜோர்ஜஸ் பொம்பிடோ தெரிவு செய்யப்பெற்றிருக்கிருர். ஜெனரல் டி கோலின் கீழ் பிரதம மந்திரியாகக் கடமையாற்றியவரும், டி கோலின் கட்சியைச் சேர்ந்தவரும் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்தவருமான திரு. பொம்பிடோ சகல விஷயத்திலும் ஜெனரல் டி கோலைப் பின்பற்று

டி கோலின் எதிர்ப்பாளர்கள் ஒன்று திரண்டு சக்திவாய்ந்த எதிர்க் கட்சியாக விளங்கக் கூடும். ஜெனரல் டி கோல் பெற்றிருந்த அதிகாரங்கள் அனைத்தும் திரு. பொம்பிடோவுக்கு இருக்குமா என்பது சந்தேகம். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பிரச்னை ஆகியவைகளைத் தீர்ப்பதில்தான் திரு. பொம்

நாவலர் சிலைத்திறப்புவிழாவும் மாணவரும்

# முழு நிகழ்ச்சியும் வானெலியில் அஞ்சல் செய்யப்படும்

# திரைப்படமும் எடுக்கப்படும்; சகல ஏற்பாடுகளும் துரிதம்

## வெளியூர்ப் பிரமுகர்களுக்கு யாழ்ப்பாண நகரில்

## தங்க வசதியும், விருந்துபசாரமும் அளிக்கப்படும்

— நமது காரியாலய நிருபர் —

யாழ்ப்பாணம், புதன் ஈழத்து மககள் நாவலர் பெருமானுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஆர்வத்துடன் ஒருங்குதிரண்டிருப்பதின் தாக்கம் கடல் கடந்து தமிழகத்திலும் எதிரொலித்திருக்கிறது. சென்னை, மதுரை, இராமநாதபுரம் முதலிய இடங்களில் நாவலருக்கு விழா எடுப்பதற்கான துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருககின்றன.

சென்னை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்திசபையும், சைவசித்தாந்த மகாசமாஜமும் கூட்டாகச்சேர்ந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வி. க. மண்டபத்தில நாவலர்விழா கொண்டாடின. இவ்விழாவுக்கு மதுரை ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் தலைமை தாங்கிஞர். சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளரும், தமிழறிஞரும் ஆகிய திரு. சச்சிதானந்த பிள்ளை நாவலர்பற்றி சிறப்புரையாற்றிஞர்.

### தமிழ்நாட்டிலும் விழா ஏற்பாடு

சங்கம்வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையிலும் சைவமும் தமிழும் வளர்த்த நாவலரின் புகழ்பாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கரு, முத்து தியாகராசனும், சார். பி.டி. இராசனும் இதற்கான ஒழுங்குகளைமேற்கொண்டு வருகின்றனர். இராமநாதபுரம் அரசன் மாளிகையிலும் ஜூலை மத்தியில் விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### புத்தகக் காட்சி விபரம்

இம்மாதம் 29-ந் திகதி முதல் ஜூலை 2-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் புத்தகக் கண்காட்சிக்கான நூல்களைச்தசேகரிப்பதில்புத்தகக்கண்காட்சி குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பிரமுகர்கள், பார்வையாளர்கள் தங்கவென ஒதுககப்பட்டுள்ளது. இங்கு தங்கும் அனைவருககும் மூன்றுநேரச் சாப்பாடுட் இவ்விடுதிகளிலேயே அளிககப்படும். இவர்களைக கவனித்து உபசரிப்பதற்கென 250 விசேஷ தொண்டர்கள் நியமிககப்பட்டுள்ளனர்.

### நெல்மூடைகள் அன்பளிப்பு

விழாப் பிரமுகர்களுககு மூன்றுநேர உணவும் வழங்கவென கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் 100 மூடை நெலலை அன்பளிப்பாக விழாச் சபையினருக்கு வழங்கியுள்ளனர். கிளிநொச்சி வர்த்தகப் பெருமக்களும் தாராளமாக நிதிஉதவி வழங்கியுள்ளார்கள். கிளிநொச்சிக்காரியாதிகாரிதிரு. ஆர். யோகநாதன் சமாதான நீதவான் திரு. மு. யோகலிங்கம் ஆகியோர் இந்த ஒழுங்குகளைக் கவனித்துவருகின்றனர்.

### வானெலி நேர்முக அஞ்சலி

இம்மாதம் 29-ம்திகதிலிருந்து ஜூலை 2-ம் திகதிவரை நடைபெறும் நான்கு நாள் விழா நிகழ்ச்சிகளையும் நேரில் கலந்துகாண முடியாத்வர்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பெருவிழாவை வானெலி வாயிலாகக் கேட்டுமகிழ்வதற்கு வசதியாக முழுநிகழ்ச்சிகளையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் நேர்முக அஞ்சலி செய்யும்.

யாழ்ப்பாண மாநாட்டு நிகழ்ச்சிகள் மட்டுமன்றி இம்மாதம் 24-ம் திகதி கொழும்பில் நடைபெறும் சிலை வழியனுப்பு வைபவத்தையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் அஞ்சலிசெய்யும் என செனட்டர் த. தீதிராஜா தெரிவித்தார்.

### விழாமுழுவதும் திரைப்படமாகும்

நாவலர் சிலை வழியனுப்பு வைபவம், பவனி, சிலை திறப்பு விழா, நாவலர் மாநாடு, கலைவிழா முழுவ

வரவேற்பு.

பிற்பகல் 3-15 மணி ஐந்துலாம்படி சந்தியிலிருந்து மோட்டார் ஊர்வலம்.

பிற்பகல்3-45மணி: கொம்பனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கமும், ஏனைய சபைகளும் வரவேற்பு.

பிற்பகல் 4-30மணி பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையில் வரவேற்பு. சைவமங்கையர் கழகம், தமிழ்ச் சங்கம் முதலியன இதில் கலந்து கொள்ளும்

மாலை 6மணி: பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில சிலையனுப்பு விழா.

25-ம் திகதி வவனியாவில வரவேற்பு விழா.

26-ம்திகதிமுதல28ம்திகதிவரை: யாழ் மாவட்ட பிரதேசத்தில சிலை பவனி.

29-ம் திகதி நலலூரிலசிலை திறப்பு விழா.

30-ம் திகதியும்ஜூலை 1-ம் திகதியும் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்குவிசேஷ பந்தலில் நாவலர் சிறப்பு மாநாடு.

2-ம் திகதி மாநாட்டு பந்தலில் கலைவிழா.

### மாநாட்டு மலர்கள்

நாவலர் விழாவை முன்னிட்டு மாநாட்டு மலர் ஒன்றும் மாநாட்டுச் சிறப்பிதழ் ஒன்றும் வெளியிடப்படும். இதற்கான வேலைகள் கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தில் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### காணி கிடைத்தது; கல் நாட்டப்பட்டது

நல்லூர் கந்தசாமி கோவில் தெற்கு வீதியில உள்ள நாவலரின் காணியை அரசாங்கம்நாவலர்சபைக்கு வழங்கியுள்ளது. கடந்த 10-ம் திகதி இக் காணியை அரசாங்கத்தின் சார்பில் வடபகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை, யாழ். பிரதேச இறைவரி அதிகாரி திரு. கந்தையா ஆகியோர் நாவலர்சபைப் பிரமுகர்களிடம் கையளித்தனர்.

99 வருடக் குத்தகையில் நாவலர்சபைக்கு வழங்கப்பட்ட இக் காணியில் நாவலர் நூலகம், மடாலயம், சைவாகம தேவார பாடசாலை முதலியன அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

(கா. நி)

பேராதனையில் எழுந்தருளியுள்ள

# பல்கலைக்கழக முருகன் கோவில்

சி. முருகவேள்

(நூலக துணைஅதிபர், இலங்கைப் பல்கலைக்கழகம்)

[பேராதனையில், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குன்றின்மேல் குடிகொண்டுள்ள முருகனுக்குக் கும்பாபிஷேகமாகி ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.]

இந்நாட்டில், இந்நூற்றாண்டில், பிறநாட்டு கல்வி நூற்கொள்கைகளை அப்

முயற்சிகள் எடுத்தாரெனினும், திருக்கேதீஸ்வரத் திருப்பணியில் ஈடுபட நேர்ந்ததனுல், அவரது முயற்சிகள் தொடர்ந்து நடைபெறவில்லை. இப்படி இருந்த ஒரு நிலைமையில் தான் 1966-ல் ஒருநாள் இந்துமாணவ சங்கத்தினைச் சேர்ந்த சில மாணவர்களும் ஆசிரியர்களும் கோயிலுக்கு என பல்கலைக்கழகம் ஒதுக்கி

# ஐயாறன் எழுதுவது

கிளிநொச்சியிலே ஒரு தீ விபத்து ஏற்பட்டு, 17 அல்லது 18 வீடுகள் எரிந்து தரைமட்டமாகிவிட்டதாயும், அதிலிருந்த குடிபவர்கள் உடுத்த துணியைத்தவிர எல்லாவற்றையும் இழந்து தவிப்பதாயும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் ரத்தினம் டெலிபோனில் தெரிவிக்கிருர்.

இது யாராவது செய்த விஷமமோ என்று விசாரித்ததில், பகல் மூன்று மணிக்கு இது நடந்ததாகவும் ஒரு வீட்டில் தேநீர் வைக்கையில், அடுப்பிலிருந்து பொறி கிளம்பி, விபத்து ஏற்பட்டதாகவும், சற்றுத் தூரத்திலிருந்த ஒரு மரக்காலையும் எரிந்து பெருஞ்சேதமென்றும் தெரிகிறது.

பானை சட்டிகளைச் செய்து உழைத்துப் பிழைத்த ஏழை மக்களுக்கே இந்த சோதனை ஏற்பட்டுள்ளது. சென்ற 1958-ம் வருட கலவரத்தின் போது, அனுராதபுரம், பொலன்னறுவை முதலிய இடங்களிலிருந்துஉயிர்தப்பி வந்து இப்பகுதியில் குடியேறிய இம்மக்களுக்கு ஏன் இந்தக்கஷ்டமோ!

இம்மக்கள் மீண்டும் பழைய படி தொழில்செய்து ஜீவனம் நடத்த ஒரு குடும்பத்துக்குக்குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படுமாம். அரசாங்கம் இவர்கள் விஷயத்தில் அனுதாபத்துடன் எவ்வளவு உதவி செய்யுமென்பது தெரியவில்லை. இவ்வெளிய மக்களுக்கு பொதுமக்கள் கூடிய உதவி செய்யவேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது நல்லதோர் தர்மமாகும் இதற்குக்கூடிய உதவிசெய்யும் புண்ணியவான்கள் தங்களுக்குத்தாங்களே நன்மை செய்துகொண்டவராவர்

0 0 0

வேலணையைச் சேர்ந்த ஒரு பிரபல வர்த்தகரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'மில்க்வைற்' சோப் ஸ்தாபன அதிபரும் பல சைவ நூல்களைக் கொணர்ந்து, அதை இந்தோனேஷியாவிலுள்ள தமிழ் பேசும் சைவர்களுக்காக அனுப்பிவைக்க இருப்பதாகத் தெரிவித்தனர்.

சுமாத்திரா என்னும் தீவில் மைடான் எனும் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் தமிழ் பெருமக்கள் வாழ்ந்துவருவதாகவும் அவர்களுக்குத் தாய்நாடாகிய தமிழ்நாடே தெரியாதென்றும், ஆனலும் அளவு கடந்த தமிழ்ப்பற்று இருப்பதாயும், இந்து சமயப் பிள்ளைகள் தங்கள் சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம்கொண்டும் புத்தகங்கள் இல்லாதது பெருங்குறையென்றும் இலங்கையிலுள்ள தமிழ். சைவ அன்பர்கள், சைவ சம்பந்தமான தமிழ்ப் புத்தகங்களை வ. நித்யானந்தம், இந்தோனேஷிய இந்து இளைஞர் சகோதரத்வ இயக்கப் பேரவை, மீடான், இந்தோனேஷியா எனும் விலாசத்துக்கு தயவுசெய்து அனுப்பிவைக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கின்ருர். இந்த வேண்டுகோளை முன்னிட்டே மேற்குறித்த அன்பர்கள், அப்புத்தகங்களைப் பார்சல் தபாலில் அனுப்பிவைக்க ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

புத்தகங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் ஏதும் தடையிருக்குமோ தெரியவில்லை. கொழும்பு விவேகானந்தசபை, அல்லது சைவ ஸ்தாபனங்கள், ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரியைக் கண்டு, இதுபற்றிய விபரங்களை அறிந்து, பலரும் அனுப்பிவைக்கும் இவ்வித நூல்களைச் சேர்த்து, மேற்குறித்த விலாசத்துக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வது மேலான பணியாகும்.

தமிழ்நாட்டிலும் இல்லாதபடி முதற்தரமான சைவ சமய பாட நூல்கள் ஈழத்திலே வெளியாகியுள்ளன. இப்புத்தகங்களை வாங்கி, தமிழகத்துக்கு மட்டுமன்றி, கடல் கடந்து பல நாடுகளில் வசிப்பவர்களுக்கும் கிடைக்கும்படி செய்வது மிகப் பயனளிப்பதாக இருக்கும். இந்த மேலான சமயப்பணிக்கு, அரசாங்கச் சட்டத்தடை ஏதும் இராதென்றே நம்புகிறேன்.

0 0 0

உற்ருரிலாதார்க் குறுதுணையாவன வேதி நன்னூல், கற்ருர் பரவப் பெருமையுடையன காதல் செய்ய, திற்பார் தமக்குக் கிளரொளி வானகந்தான் கொடுக்கும், அற்ருர்க்கரும் பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே.

— அப்பர் அடிகள்

# 'போலிவேஷதாரிகளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

லின் கட்சியைச் சேர்ந்தவரும் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்தவருமான திரு. பொம்பிடோ சகல விஷயத்திலும் ஜெனரல் டி கோலேப் பின்பற்றுவாரா அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது, அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவைகளைச் சேர்த்து நடந்து கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனாலும் ஜெனரல் டி கோல் செய்த சில தவறுகளை திரு. பொம்பிடோ செய்ய மாட்டார் என்பது நிச்சயம். திரு. பொம்பிடோ புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு எதிர்ப்பும் கணிசமான அளவு இருக்கிறது.

...என்பது சந்தேகம். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பிரச்னை ஆகியவைகளைத் தீர்ப்பதில்தான் திரு. பொம்பிடோவின் வெற்றி பெரிதும் தங்கியுள்ளது.

திரு. பொம்பிடோவின் வெற்றியும் திறமையும் பிரான்சை மீண்டும் சக்திமிக்க வல்லரசாக உருவாக்குவதில் மட்டுமல்ல மேற்கு ஆசியா, வியட்நாம் பிரச்னைகளில் அமைதிகாண்பதற்கு பிரான்ஸ் எந்தவகையில் தனது பணியைச் செய்ய முடியுமென்பதிலும் உலக அமைதிக்கு அது எந்த வகையில் சேவை செய்ய முடியுமென்பதிலும் தான் தங்கியிருக்கிறது.

# 12ஆண்டுகளுக்கொருமுறை மலரும் குறிஞ்சிப்பூ

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொருமுறை மலரும் குறிஞ்சிப்பூ இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் வாக்கில் மலரத் தொடங்கும் கத்தரிப்பூ நிறத்திலான இம்மலர் 12 ஆண்டுகளுக்கு முன் (1957 58) மலர்ந்தது. இம் மலர்கள் அடர்த்தியாக கோடைக்கானல் பகுதியில் மலர்வதின்காரணமாகவே அப்பகுதிக்கு பழந்தமிழர்கள் 'குறிஞ்சி மலை' என்னும் பெயரிட்டு அழைத்தனர். தென்னிந்தியாவின் பிரபலயமான கனகாம்பரம் நீலாம்பரம் போன்ற மலர் இனத்தைச் சேர்ந்ததுதான் குறிஞ்சி மலரும்.

4500 அடியிலிருந்து 6000 அடிவரையிலான மலைப் பிரதேசத்தில இம் மலர்ச் செடி வளர்கின்றது. மலைப் பிரதேசத்தில் இம்மலர் பூத்துக்குலுங்கும் காட்சி ரம்மியமாக இருக்கும். சுகந்தமலரான குறிஞ்சியில் நிறையதேன் இருககும் இத்தேனை நாடி பககத்து காடுகளிலிருந்து கரடிகள் வருவதுண்டாம். இந்த மலர்ச்செடிகள் பற்றி ஆராய்ந்த தாவரவியல் நிபுணர்கள் பின்வரும் தகவல்களையும் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட்மாதம் தொடககம் மார்ச் மாதம் வரையிலஇதுமலரும் ஆறுமாத காலத்தின் பின் இச்செடிகள் சிறிதுசிறிதாக மறைந்து விடும். ஆனால அதன் விதைகள் நிலத்தின் அடியில புதையுண்டுபத்தாண்டுகள் கிடககும். பத்து அலலது பதினெருஆண்டுகளின் பின்னர் மெதுவாக செடிகள் மலையில துளிர்விட்டு வளரும் பன்னிரண்டாவது வருடம் இலட்சக்கணக்கான மலர்களாக பூத்துக் குலுங்கும்.

இம் மாதிரி ஆறு வருடங்களுக்கொருமுறைபுஷ்பிக்கும் மலர்களும் இந்தியாவில் உண்டு. ஆனால இவை இத்தனை இலட்சககணககில் மலர்வதிலலை.

...இந்திய தகவல பகுதி

## மந்திரியை வரவேற்க ஏற்பாடு

புலோலி, செவ்வாய்

கல்வி மந்திரியின் நூற்றுண்டு விழாவை ஆதரிக்கும் முகமாக இலங்கை பண்டிதர் சங்கம் கல்வி மந்திரி ஐ.எம்.ஆர்.ஏ. இரியகொல்லைக்கு ஒரு வரவேற்பு விழா நடத்த நடவடிக்கைஎடுத்து வருகிறது.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கரவெட்டி வாணி கலை கழகத்தின் மண்டபத்தில் வாணி கலைக்கழக தலைவர் பண்டிதர் க.வீரகத்தி தலைமையில் நடைபெற்றது.

...முதல் ஜூலை 2-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் புத்தகக் கண்காட்சிக்கான நூல்களைச்தசேகரிப்பதில்புத்தகக்கண்காட்சி குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுவரை பல அரிய நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே குழுவின் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் சேகரித்து வைத்திருக்கும் சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகத்தம்பிரான், காசிவாசி செந்திநாதஐயர், சங்கரபண்டிதர் முதலியோரின் நூல்கள் காட்சியில் வைக்கப்படும்.

இதுசம்பந்தமாக இதன் அமைப்பாளரான திரு. ச. அம்பிகைபாகன் பின்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

பூனகரி பொன்னுவெளி முன்னள் உடையார் திரு. கு. அருளம்பலம், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை உதவியுள்ளார். இவற்றில் பலவும் நாவலரின் முதற்பதிப்பு நூல்களாகும். இணுவில் அம்பிகை உபாத்தியாயரின் பேரனை கதிர்காமநாதனும் பல அரிய நூல்களைக் கொடுத்துள்ளார். சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரின் புதல்வர்களான முத்துக்குமாரசுவாமி ப்பிள்ளையும். அம்பலவாணபிள்ளையும், யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலைய அதிபரும், திரு. த. கைலாசபிள்ளையும் பல நூல்களைக் கண்காட்சிக்குக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

## மகாநாட்டுக்கு வருவோருக்கு தங்கவசதி

நான்குநாள் விழாவுககும் யாழ்ப்பாணத்துககு வருபவர்களுககு தங்குமிடவசதிகளும், விருந்துபசார ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றது.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம் இந்துககலலூரி, யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய மூன்று கலலூரிகளின் விசாலமான விடுதி மண்டபங்களும் மாநாட்டுப் பிரதிநிதிகள்,

## கல்வி

யாழ். டியூட்டோரியல் கல்லூரி, நெல்லியடிச் சந்தி, கரவெட்டி, இன்று 18-6-69 காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படும். தென்புலோலி ஆங்கில ஆசிரியர் திரு. சி. சிவசுப்பிரமணியத்தால் ஆங்கிலம் போதிக்கப்படும். வர்த்தக விஞ்ஞானக் கல்வி வகுப்புக்களுக்குச் சொற்ப இடங்களே காலியாக உள்ளன. 1060

## விழாமுழுவதும் திரைப்படமாகும்

நாவலர் சிலை வழியனுப்பு வைபவம், பவனி, சிலை திறப்பு விழா, நாவலர் மாநாடு, கலைவிழா முழுவதையும் திரைப்படமாக்குமாறு அகில இலங்கை இளம் நடிகர் சங்கம், விடுத்த வேண்டுகோளை நாவலர் சபை ஏற்றுள்ளது.

தமிழாராய்ச்சி மாநாட்டைப் போன்று இதனையும் திரைப்படமாகிச்சகலதியேட்டர்களிலும் காட்டுவதற்கு சினிமாஸ்லிமிட்டெட் ஸ்தாபன அதிபர் திரு. க. குணரத்தினம் சம்மதித்துள்ளார்.

## அனைவருக்கும் அழைப்பு

கொழும்பில் 24-ம் திகதி நடைபெறும் நாவலர் சிலை வழியனுப்பு வைபவத்திற்கு கலந்து கொள்ளுமாறு மகாதேசாதிபதி, பிரதமா, எதிர்க்கட்சித்தலைவர்கள் சகல கட்சிகளின்தலைவர்கள் தமித்தலைவர்கள் சமய சமூகப் பெரியார்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நிகழ்ச்சிகள் ஒரு நோக்கு

24-ம் திகதியிலிருந்து ஜூலை 2-ம் திகதி வரை நடக்கும் முழு விழா நிகழ்ச்சிகளையும் ஒரு நோக்கில் பின்வருமாறு பார்க்கலாம்:-

24-ம் திகதி 12 மணி: கொழும்பு விவேகானந்த சபையின்சிலைக்கு வரவேற்பு

பிற்பகல் 1-30 மணி: விவேகானந்த சபையிலிருந்துஊர்வலம்.

பிற்பகல் 3-00மணி: ஐந்துலாம்படிச் சந்தியில் புறக்கோட்டை வர்த்தகர்கள்

## சிங்களம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசாங்க ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவதனையும் சங்கம் தீவிரமாகக் கண்டிக்கிறது.

ஆங்கில மூலமாக சேவைக்குச் சேர்ந்த சிங்கள ஊழியர்கள் தங்களது பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கு சிங்களத்தில் எழுத உரிமை வழங்கியதுபோல் ஆங்கில மூலமாகச் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தமிழ்தங்களது தாய்மொழி மூலம் பதவி உயர்வுப் பரீட்சைகள் எழுத அனுமதிக்க வேண்டுமென இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது, இதனல் இவர்கள் இதர சக ஊழியர்களுடன் பரீட்சையில் தகமைபெற தக்வாய்பனிப்பதாக இருக்கும் என்பதை சங்கம் வலியுறுத்துகிறது.

...தியை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.]

இந்நாட்டில், இந்நூற்றுண்டில், பிறநாட்டு கல்வி நூற்கொள்கைகளை அப்படியே சுவீகரிக்காமல் எவருடனும் எவ்விதமான குரோதமும் விரோதமும் இல்லாமல், தம் சொந்த ஆத்மீக அனுபவத்தின் அடிப்படையில் நின்று, பொதுவாக இந்நாட்டில், உள்ள சிறப்பாக இந்நாட்டுத் தமிழ்ப் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் எத்தகைய கல்வி சிறப்புடையது என்று சீரிய முறையில் சிந்தித்தவர், அதற்கும் மேலாகச் சிந்தித்துச் செயலாற்றியவர் பொன்னம்பலம் இராமநாதன், ஒருவரே ஆவார். அரசாங்கப் பிரசுரங்களில் அவர் கூறியனவாக உள்ளனவற்றையும் அவர் தனது பள்ளிக்கூடங்கள் பற்றி எழுதியவற்றையும் மற்றும் அவருடைய நூல்களையும் படித்தால், அதன் உண்மை புலப்படும். வெறும் லௌகீகக் கல்வி அது எவ்வளவுதான் நவீனமாக இருந்தாலும் எவ்வளவுதான் 'உதவுவதாக' இருந்தாலும் ஆத்மீகச் செறிவு இல்லாமல் இருந்தால் விழல் என்பது அவரது தெளிந்த கருத்தாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாகுவதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களில் இராமநாதனும் ஒருவராவர். அதனலோ என்னவோ, அவர்கள் கீழைத்தேசக்கலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும், மாணவ மாணவிகள் தத்தம் மரபுப்படி இறைவனை வணங்கி வழிபட்டுப் படிக்க வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதையும் இருபெருங் கொள்கைகளாக ஏற்றுக்கொண்டார்கள். இக்கொள்கைகளுக்கேற்ப இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேசக் கல்விக்குத் தனிப்பீடம் ஒன்று இருக்கிறது. தேவாலயங்களும் கோயில்களும் மசூதியும் கட்ட நிலங்களும் ஒதுக்கப்பட்டன. கிறிஸ்தவ தேவாலயங்கள் மிகவும் விரைவில் கட்டப்பெற்றன. அடுத்து டாகாபா கட்டப்பெற்றது. மசூதியினை கட்ட முஸ்லிம் நண்பர்கள் தொடங்கியிருந்தார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னரே சைவத்திருவாளர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் சைவ மாணவ மாணவிகளுக்கென ஒரு சிவாலயம் நிர்மாணிக்க சில...

இருந்த ஒரு நிலைமையில் தான் 1966-ல் ஒருநாள் இந்துமாணவ சங்கத்தினைச் சேர்ந்த சில மாணவர்களும் ஆசிரியர்களும் கோயிலுக்கு என பல்கலைக்கழகம் ஒதுக்கியிருந்த கல்லும் முள்ளும், புல்லும் புதருமாயிருந்த இடத்திற்குப்போய், வடக்கு நோக்கி நின்று தேவாரமும் புராணமும் சொல்லி கற்பூரம்கொளுத்தி முதலாவது பிடிமண்ணை வெட்டினர்கள். வெட்டுகிறபோது, கோயில் கட்டுவதற்கென இருந்த பணம் மிக மிகக் குறைவானதாகும். இவ்வாறு தொடங்கிய திருப்பணி, மிகவும்குறுகிய காலத்தில், ஒன்றரையாண்டு காலத்தில் ஒன்றரை லட்சம் ரூபாவில் ஓரளவு பூர்த்தியாகி, சென்ற ஆண்டு ஆனி மாதம் கும்பாபிஷேகமும் சிறப்பாக நிறைவெய்தியது திருவருட் செயலேஆகும்.

கோயில் செவ்வனே கணிதப் பேராசிரியர் பேரம்பலம் கனக சபாபதியின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. மாணவ மாணவிகள் சுவாமி கும்பிடப் பழகுவதுடன் திருக்கோயில் நெறியில் பயிற்சியும் பெற்று வருகிறார்கள். எஞ்சியிருக்கும் சில திருப்பணிவேலைகளும் பூர்த்தியாகி வருகின்றன. இக்கோயில் வளர்ச்சியடைந்து இப்பல்கலைக்கழகத்தில் படிக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கு தெய்வ நெறியில் ஓர் ஈடுபாட்டினைக் கொடுக்கவேண்டும். அத்துடன், பணவசதி குறைந்த சைவ மாணவ மாணவிகளுக்கு உண்டியும் உறையும் கொடுத்து அவர்களைக் கல்வித் துறையில் வளர்த்துவிடவும்வேண்டும். இதற்கெல்லாம் நிறைய நிதி வேண்டும். கேட்ட கேட்ட நேரமெல்லாம் திருப்பணிக்கு வரையாது தந்த சைவ அன்பர்கள் மேலும் மேலும் தர திருவருள் பாலிக்கவேண்டும்.

— —

பாற் சங்கத்தை

## மீண்டும் திறக்க நடவடிக்கை

சுழிபுரம், செவ்.

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தை மீண்டும் இயக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பால் மாடுகள் வைத்திருக்கும் பொது மக்கள் சிலர் பாலைக் கொடுக்க வழி செய்யுமாறும், எமது சிறு தொழில் விருத்திக்கு ஊக்கம் கொடுக்குமாறும் கூட்டுறவு ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

...தவில் மைடான எனும் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் தமிழ் பெருமக்கள்

...பொருள் காணக் ஐயாறனை அடித்தலமே.

—அப்பர் அடிகள்

# 'போலிவேஷதாரிகளை நம்ப வேண்டாம்'

—பதியுதீன் மகமூத்

யாழ்ப்பாணம், புதன்

இஸ்லாமிய சோஷலிஸ வாலிப முன்னணியின் கிளையொன்று கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணித் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர் பேசும் போது, இஸ்லாமிய சோஷலிஸ வாலிப முன்னணி இஸ்லாத்தின் கொள்கைக்கும், கட்டுப்பாட்டுக்கும், முரண்படாத வகையில் நடப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனின் கருணையும், பெருமானர் (ஸல்) அவர்களது உதவியும் என்றென்றும் இருக்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வதாகக் கூறினர்.

அவர் மேலும் பேசும் போது உண்மைக்கு மாறுன கருத்துக்களையும் சமய சந்தர்ப்பவாதிகளையும் இஸ்லாம் எப்போதும் எதிர்த்துப் போராடியே வந்திருக்கிறது. மனிதனைப் பிளவுபடுத்தும் விஷயத்திலும் மனிதனுக்கு அளிக்கப்பட வேண்டிய அந்தஸ்திலும் இஸ்லாம் மிகக் கண்ணியத்துடன் நடந்து வந்திருக்கின்ற தென்பதை சரித்திரம் தெளிவாகக் காண்பிக்கின்றது ஆகவே நீங்கள் போலி வேஷதாரிகளை நம்பி ஏமாறுமல் உங்களுக்கேற்படும் பிரச்னைகளை நீக்குவதற்கும் தேவையானவைகளை அமுல் நடத்துவதற்கும் வேறெங்கும் போக வேண்டாம், வேறெவரையும் பின்பற்ற வேண்டாம். நம்மிடம் அழகிய முன்மாதிரியானதும் எக்காலத்திற்கும் பொருத்தமுடையதுமான வேத நூலாம்திருக்குர் ஆன் இருக்கின்றது. அதைப் பின்பற்றுங்கள். அதில் நம்முடைய பிரச்னை தீர்வதற்கு என்ன கூறப்பட்டிருக்கின்றது என்று பாருங்கள் இப்போது எல்லாப் பாஷைகளிலும் திருக்குர் ஆன் மொழி பெயர்க்கப் பட்டிருப்பதால் நீங்களே பார்த்துக் தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

யாழ்ப்பாணக்கிளை இஸ்லாமிய சோஷலிச முன்னணித் தலைவர், ஜனுப் எம். மஜீத் யாழ்ப்பாண மாநகர சபை 21-ம் வட்டார அங்கத்தவர் ஜனுப். எம். ஜி. பஸீர், 17-ம் வட்டார அங்கத்தவர் ஜனுப். எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர், ஜனுப். எம். ஸி. றஊபு ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்:-ஜனுப் எம். ஏ. ஸி. புஆத்.

உபதலைவர்:- ஜனுப். எஸ். ஏ. ஸி. ஏ. முலப்பர்.

செயலாளர்:- ஜனுப் எம். யூ. எம். தாஹிர்.

உபசெயலாளர்:- ஜனுப். ஏ. ஆர். ஏ. சக்கூர்.

தனுதிகாரி:- ஜனுப். எம். மஜீது.

போஷகர்:- டாக்டர் அல்ஹாஜ்பதியுதீன் மஹ்மூத்.

செயற்குழு அங்கத்தினர்களாக: ஜனுப் களான எம். ஜயூப் ஏ. ஸி. என். எம். தாஜ், ஏ நஜ்முத்தீன், எம். யூசுபு, யூ. ரி. தமீம், எஸ். ஏச். எம். ஜஃபர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(மு. நி)

## உப தபால் நிலைய

சாய்ந்தமருது, செவ்.

நிந்தவூர் தொகுதியைச் சேர்ந்த காரைதீவு கரடித் தோட்டம் பகுதியில் உப தபால் நிலையமொன்று நிறுவப்படவிருக்கின்றது.

கரடித் தோட்டம் பகுதி மக்களின் தபால் வசதிக்காக உபதபால் நிலையமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை கிராமசபைத் தலைவர் டாக்டர் மா. பரசுராமன் செய்து வருகின்றார்.

## திறப்புக் கோர்வை யாருடையது?

ஆஸ்பத்திரி வீதியில் மரியதாஸ் என்பவரால் கண்டெடுக்கப் பட்ட திறப்புக்கோர்வையொன்றை ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் திகதி ... வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org